RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
BUYING - SELLING - LEASE - PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்


வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086


வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage


GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி!
குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL


மலர்:- 30, 24 மே 2024 இதழ்:- 52

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

ஈழநாடு வாசகர்களின் கவனத்திற்கு! எந்தச் செய்தியையும் முந்தித் தரும் ஒரே ஏடாக கடந்த 31 ஆண்டுகளாக வெளி வந்து கொண்டிருந்த உங்கள் அபிமான ஈழநாடு 03 மே 2024 வெள்ளிக்கிழமை முதல் மாதம் இரு முறையாக வெளி வருகின்றது. அடுத்த இதழ் 31 மே 2024 வெள்ளிக்கிழமை என்பதை வாகர்களுக்கு அறியத் தருகின்றோம். இது ஓர் தற்காலிக ஏற்பாடே. எனது கண் சம்பந்தமான சிகிச்சை காரணமாக இந்த ஏற்பாடு. இதேவேளை eelanadu.ca என்ற மின்னிதழ் மூலமாகவும் முகநூல் மூலமாகவும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வாசிக்கலாம். அன்பு இல்லக் குழந்தைகளின் வாழ்வாதார உதவிகள் வழமை போல் நடைபெற்று மாதம் இரு முறை வெளிவரும் ஈழநாடு அச்சுப் பத்திரிகையில் பிரசுரமாகும் என்பதையும் அறியத் தருகின்றேன். என்றும் அன்புடன் T.K. பரமேஸ்வரன் -ஈழநாடு ஆசிரியர்


## இராணுவத்திடம் குடும்பமாக சரணடைந்தவர்களின் குழந்தைகளுக்கு என்ன நடந்தது? அவர்கள் எங்கே? சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் கேள்வி?



இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதி தருணங்களில் இராணுவத்தினரிடம் சரணடைந்த குடும்பங்களின் குழந்தைகள் எங்கே அவர்களிற்கு என்ன நடந்தது என சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட் கேள்வி எழுப்பி யுள்ளார். கொழும்பில் 20 மே 2024 இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இந்த கேள்வியை எழுப்பினார் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது. (3ம் பக்ம் பார்க்க)

ஈழநாடு:- மின்னிதழில் வாசிக்க **eelanadu.ca**

## தேசியத் தலைவர் பிரபாகரனதும் குடும்பத்தினரதும் உயிர்த் தியாகங்களை விற்றுப் பிழைக்காதீர்கள்! தலைவர் பிரபாகரனுக்கு அஞ்சலி செலுத்திய அண்ணன்



விடுதலைப் புலிகளின் தலைவர் மேதகு பிரபாகரன் மற்றும் அவரது குடும்பத் தாருக்கு டென்மார்க் கில் உள்ள அவரது சொந்த அண்ணன் மனோ கரன் குடும்பத்தார் ஒழுங்கு செய்த முள்ளிவாய்க் கால் நினைவு நாளான 18 மே 2024 முதன்முதலாக அஞ்சலி செலுத்தியுள்ளனர். இந்நிகழ்வானது டென்மார்க்கில் உள்ள (3ம் பக்கம் பார்க்க)



**கருணாகரன் எழதுகின்றார்**

## காலம் கோருவது வெறும் கருத்துருவாக்கிகளை அல்ல

## ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் பிசுபிசுத்தது! தமிழரசுக்கட்சியின் மத்திய குழு இன்னமும் தீர்மானிக்கவில்லை! குத்து விளக்குக் கூட்டணிக்குள் குழப்பம்!

**யசீந்திரா எழதுகின்றார்**

## தமிழ் பொது வேட்பாளர் முயற்சி தோல்வி அடையுமா?



## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! மே மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
office@nishanthanlaw.onmicrosoft.com
Fax 1-800-878-1348
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd. Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial Industrial Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins
Manulife

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600

இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600


KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

## SELLING OR BUYING A HOME?

# www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



21 Years Real Estate Experience

**Siva Kandiah**
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com

Team SIVA
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
Sales Representative B.Comm.
Dir: 647-221-5220
piravien@gmail.com



HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY





## Exceptional Opportunity to lease a prime stand-alone Building and nicely finished ground floor office space on Oshawa

- This property offers 19,500 Sq Ft of prime Industrial space
- Including 4,300 Sq Ft of Office space,
- 15,200 Sq Ft of Warehouse plus mezzanine space
- This building features 2 truck level doors within a heated dock area
- 2 Drive -in Doors with trailer parking on the side.


- Well-connected to highways (401,412 and 407)
- Easy access to public transit, providing great access to a strong labor pool
- Conveniently located near the GM plant







### Dundas / Henry




Whitby $999,000
Bedrooms: 3+2 Washrooms: 2
Easy access to Whitby Go

### Midland Ave/ Eglinton Ave




Scarborough $1,150,000
Bedrooms: 3 Washrooms: 2
Excellent Location, Min To Subway

### Taunton/Garden



Whitby $969,000
Bedrooms: 3 Washrooms: 2
Professionally Renovated Home

### Lawrence /Morningside



Scarborough $425,000
Bedrooms: 3 Washrooms: 2
Large Open Balcony

### Tapscott Rd/Mclevin Ave

FOR LEASE



Scarborough $2,200
Bedrooms: 2 Washrooms: 1
Clean and well kept Townhouse

### Major Mac./Markham Rd

FOR LEASE



Markham $1,850
Bedrooms: 2 Washrooms: 1
Excellent Location, Sep. Entrance

Looking for more house?

# www.AgentSiva.com

WILL BRING THE BEST RESULTS!

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

# இராணுவத்திடம் குடும்பமாக சரணடைந்தவர்களின் குழந்தைகளுக்கு என்ன நடந்தது? அவர்கள் எங்கே? சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் கேள்வி?



இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதி தருணங்களில் இராணுவத்தினரிடம் சரணடைந்த குடும்பங்களின் குழந்தைகள் எங்கே அவர்களிற்கு என்ன நடந்தது என சர்வதேச மன்னிப்புச்சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் 20 மே 2024 இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இந்த கேள்வியை எழுப்பினார் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

எனது விஜயம் குறிப்பிடத்தக்கது ஏனென்றால் இலங்கையின் உள்நாட்டு போர் முடிவடைந்து 15 வருடங்களாகின்ற காலப்பகுதியில் இந்த விஜயம் இடம் பெற்றுள்ளது. இந்த காலப்பகுதியில் பல ஆயிரக்கணக்கானவர்கள் காணாமலாக்கப்பட்டனர் .

இந்த வருடம் இலங்கையில் நாடாளுமன்ற ஜனாதிபதி தேர்தல்கள் இடம் பெறவுள்ளதால் இந்த வருடம் இலங்கையின் தலைவிதியையும் மனித உரிமை பாதுகாப்பின் எதிர்காலத்தையும் தீர்மானிக்கும்.

நான் ஏன் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டேன்? இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து 15 வருடங்களாகின்ற நிலையில் இலங்கையின் மனித உரிமை நிலவரம் குறித்து அறிந்துகொள்வதற்காக இந்த விஜயத்தை நான் மேற்கொண்டேன்.

இலங்கையில் நீதியை நிலைநாட்டுவதற்காக நாங்கள் என்ன செய்யவேண்டும் என்பதை அறிவதற்காகவும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களிற்கு சர்வதேச மன்னிப்புச்சபையின் ஆதரவை வழங்கவும் நான் இந்த விஜயத்தினை மேற்கொண்டேன்.

நான் முள்ளிவாய்க்கால் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டேன். காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களை சந்தித்தேன். அவர்கள் வெளிப்படுத்துகின்ற துணிச்சலும் மீள்எழுச்சி தன்மையும் நீதியை காண்பதற்கான அவர்களது உறுதிப்பாடும் எனது மனதை தொட்டுள்ளது.

இலங்கையில் மிகப் பெருமளவானவர்கள் காணாமல் போயுள்ளனர் அவர்களிற்கு என்ன நடந்தது. காணாமல் போதல் என்பது மிகமோசமான வன்முறை. அது முடிவிற்கு வராது. உங்களிற்கு தெரியாது பாதிக்கப்பட்டவர்களிற்கு பலபல வருடங்களிற்கு இந்த வலி தொடரும். மரணத்தை விட இது வலிமிகுந்தது.

வலியும் வேதனையும் மிக மோசமானதாக காணப்படும். உளவியல் சித்திரவதை. நாளாந்தம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாரமும் தசாப்தங்களாக இந்த வலியும் வேதனையும் தொடரும்.

இது இலங்கையின் மீது விழுந்த கறை இந்த கறையை அகற்ற ஒவ்வொரு இலங்கை பிரஜையும் முன்வரவேண்டும்.

அந்த குழந்தைகள் எங்கே நான்கைந்து மாத குழந்தைகள் மூன்று நான்கு வயதானவர்கள் நான் அவர்களின் படங்களை பார்த்திருக்கின்றேன். 15 வருடங்களாகியும் பதில் இல்லை இது மிக நீண்டகாலம். இது மன்னிக்க முடியாத குற்றம்– இவர்கள் குறித்து அரசாங்கம் பதிலளிக்கவேண்டும். இவர்கள் தாங்களாக முன்வந்து சரணடைந்தவர்கள். சரணடைவதற்கான பகுதிக்கு தாங்களாக சென்று சரணடைந்தார்கள். எங்கே அந்த குழந்தைகள்? என்றார்.

# தேசியத் தலைவர் பிரபாகரனதும் குடும்பத்தினரதும் உயிர்த் தியாகங்களை விற்றுப் பிழைக்காதீர்கள்! தலைவர் பிரபாகரனுக்கு அஞ்சலி செலுத்திய அண்ணன்



விடுதலைப் புலிகளின் தலைவர் மேதகு பிரபாகரன் மற்றும் அவரது குடும்பத் தாருக்கு டென்மார்க்கில் உள்ள அவரது சொந்த அண்ணன் மனோகரன் குடும்பத்தார் ஒழுங்கு செய்த முள்ளிவாய்க்கால் நினைவு நாளான 18 மே 2024 முதன்முதலாக அஞ்சலி செலுத்தியுள்ளனர். இந்நிகழ்வானது டென்மார்க்கில் உள்ள DGI HUSET VEJLE மண்டபத்தில் இடம் பெற்றுள்ளது.

தேசிய தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் சகோதரர் வேலுப்பிள்ளை மனோகரன் உள்ளிட்ட அவரின் குடும்பத்தார் மற்றும் பெருந்திரளான மக்கள் இணைந்து இவ்வாறு தமது உணர்வுபூர்வ அஞ்சலிகளை செலுத்தியிருந்தனர். முள்ளிவாய்க்கால் யுத்தம் முடிவடைந்து 15 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் இதுவரை தேசிய தலைவருக்கோ அவரது குடும்பத்தினருக்கோ எவ்வித அஞ்சலிகளும், நினைவேந்தல்களும் நடத்தப்பட்டதில்லை. இந்தநிலையில், இந்த வருடம் முதன் முறையாக தேசிய தலைவர் உள்ளிட்ட குடும்பத்தினருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. இதன் போது, தேசிய தலைவருக்கு டென்மார்க்கில் வைத்து அவரது சகோதரர் மனோகரன் அஞ்சலி செலுத்தினார்.

இது வரை காலமும் தலைவர் உயிருடன் இருக்கின்றார். இந்த வருகின்றார். அந்தா வருகின்றார் எனக் கூறி இயக்கச் சொத்துக்களை கொள்ளையடித்து சுகபோக வாழ்வு வாழ்ந்தவர்கள், தலைவர் வரட்டும் சொத்துக்களைத் தருகின்றேன் என்று சொன்னவர்கள் இனி மேலாவது 15 வருடங்கள் முடிந்த நிலையிலும் தாயகத்தின் வறுமையில் வாடும் போராளிகளுக்கு (20ம் பக்கம் பார்க்க)

**வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**


**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544



# ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயம் பிசுபிசுத்தது! தமிழரசுக்கட்சியின் மத்திய குழு இன்னமும் தீர்மானிக்கவில்லை! குத்து விளக்குக் கூட்டணிக்குள் குத்துவெட்டு! குழப்பம்!



ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்காக கூடிய இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழு எவ்விதமான தீர்மானங்களும் இன்றி கூட்டத்தினை நிறைவுக்கு கொண்டு வந்துள்ளது.

இதே நேரம் குறித்த விடயம் சம்பந்தமாக கட்சியின் சிரேஷ்ட தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனைச் சந்திப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிரசுக்கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் வவுனியா இரண்டாம் குறுக்கு வீதியில் உள்ள தனியார் விடுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 19 மே 2024 காலை 10.30 முதல் மாலை 6.30 வரையில் நடைபெற்றிருந்தது. குறித்த கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சாணக்கியன் மற்றும் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் பங்கேற்றிருக்கவில்லை.

இந்நிலையில் குறித்த கூட்டத்தில் முதலில் கட்சிக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள வழக்கு விவகாரங்கள் சம்பந்தமாக ஆராயப்பட்டது. இதன் போது பல்வேறு வாதப் பிரதவாதங்கள் நடைபெற்றன.

ஈற்றில் வழக்காளிகளின் சட்டத்தரணிகளுடன் சுமூகத்தீர்வுக்கு இணக்கப் பேச்சு நடத்துவதற்கு மத்திய குழு உறுப்பினர்களும் ஜனாதிபதி சட்டத்தரணிகளுமான எம்.ஏ.சுமந்திரன், கே.வி.தவராசா ஆகிய இருவரும் இதனை கையாளுமாறு தீர்மானிக்கப்பட்டது. கட்சியின் தலைவர் உட்பட ஏனைய அனைத்து தெரிவுகளும் மீள ஆரம்பத்தில் இருந்து யாப்புக்கு அமைவாக கையாள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

இதனையடுத்து ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவரை களமிறக்குவது தொடர்பில் ஆராயப்பட்டது. இதன்போது சிறீதரன், அரியநேத்திரன் மற்றும் ஆகியோர் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பில் தாம் கொண்டிருக்கின்ற கருத்துக்களை வெளிப்படுத்தினார்கள்.

அதேநேரம் கே.வி.தவிராசா பொது வேட்பாளர் தொடர்பில் உள்ள சாதக மற்றும் பாதக நிலைமைகளை சுட்டிக் காட்டினார். எனினும் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதால் ஏற்படுகின்ற பாதக நிலைமைகள் தொடர்பில் கட்சியின் மத்தியசெயற்குழு உறுப்பினர்கள் எண்மர் வரையில் தமது அபிப்பிராயங்களை வெளிப்படுத்தினர். அத்துடன் தமிழ் பொதுவேட்பாளர் விடயத்தில் அவசரப்பட்டு முடிவுகளை எடுக்க வேண்டியதில்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளரை நிறுத்துவதற்கு எதிரான நிலைப்பாட்டை ஏலவே வெளிப்படுத்தியிருந்த சுமந்திரன் இறுதி வரையில் அமைதியாக இருந்தார். எனினும் சக உறுப்பினர்கள் அவருடைய கருத்தினையும் பகிருமாறு கோரியதை அடுத்து ஏற்கனவே இந்த விடயம் சம்பந்தமாக தான் கூறிய நிலைப்பாட்டில் இருந்து மாறவில்லை என்று தெரிவித்ததுடன் சம்பந்தன் ஐயா தன்னிடத்தில் கூறிய விடயங்களையும் சுட்டிக்காட்டினார்.

அதனைத் தொடர்ந்து சம்பந்தனை சந்திப்பதற்கான இணக்கம் உறுப்பினர்களிடத்தில் ஏற்படுத்தப்பட்டது. மேலும் ஜனாதிபதி தேர்தலில் தென்னிலங்கை வேட்பாளர்கள் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டு அவர்களின் நிலைப்பாடுகளை அறிந்ததன் பின்னர் இறுதியான தீர்தானங்களை எடுக்கலாம் என்றும் குறித்த விடயம் சம்பந்தமாக மீண்டும் மத்திய செயற்குழுவைக் கூட்டிப்பேசுவதெனவும் உறுப்பினர்கள் இணக்கம் கண்டனர்.

இதேநேரம் சுமந்திரன் தென்னிலங்கையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படும் மூவருடன் தான் நடத்திய உரையாடல் சம்பந்தமாக பொருத்தமான நேரத்தில் பகிர்ந்து கொள்வதாகவும் கூறியுள்ளார். முன்னதாக, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சிவில் அமைப்புக்களுக்கும், அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பின் போது பொதுவேட்பாளர் விடயத்தில் தீர்மானத்தினை அறிவிப்பதற்கு இலங்கை தமிழரசுக்கட்சிக்கு 14 நாட்கள் வழங்கப்பட்ட நிலையிலேயே வவுனியாவில் கூட்டம் நடைபெற்றதோடு அது தீர்மானமின்றி நிறைவடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### குத்துவிளக்குக் கூட்டணிக்குள் குத்துவெட்டு1

இது இவ்வாறிருக்க தனித்தனியாவும், கூட்டணியாகவும் பேசிய பின்னரேயே இறுதித் தீர்மானம் எடுக்க முடியும் என்று ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் (20ம் பக்கம் பார்க்க)




கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

அம்பாள் அடியார்களே!

அருள்மிகு கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் பக்தர்களுக்கு வணக்கம். கனடா ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் இலாப நோக்கமற்ற தொண்டு நிறுவனமாக கனடா அரசாங்கத்தினால் அங்கீகாரம் பெற்றுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இதுவரை காலமும் கோயில் நிலம் வாங்குவதற்கு நன்கொடை கொடுத்த பக்தர்கள் அனைவரும் உங்கள் பழைய பற்றுச்சீட்டை கோயிலில் கொடுத்து கனடிய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலக்கம் பதியப் பெற்ற புதிய பற்றுச்சீட்டை கோயிலில் பெற்றுக் கொண்டு அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச் சலுகையை பெற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இனி வரும் காலங்களில் கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயிலுக்கு நிலம் வாங்குவதற்கும் இப்போது நடைபெறும் திருப்பணிக்காக நன்கொடை செய்வதற்கும் அல்லது எந்தவிதமான பூஜைகள் திருவிழாக்களிற்கும் கோயிலில் பணம் கொடுக்கும் போது அதற்குரிய பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளுவதன் மூலம் அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச்சலுகையை பெற்றுக்கொள்ளலாம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். ஓம் தாயே மகமாரி — நிர்வாகசபை

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# ஈழத்தமிழர்கள் சுயநிர்ணய உரிமை தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு தேவை - அ.கா ஆதரவு

ஈழத்தமிழர்களின் தன்னாட்சி மற்றும் சுயநிர்ணய உரிமைகள் தொடர்பான சர்வஜனவாக்கெடுப்பு மற்றும் ஈழத்தில் இடம் பெற்றது இனப்படுகொலை என்பதை அங்கீகரிக்க வேண்டும் என கோரும் தீர்மானம் அமெரிக்க காங்கிரசில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் அதனை வரவேற்றுள்ளனர்.

இந்த நிகழ்வு அமெரிக்க காங்கிரஸ் நூலகத்தில் இடம் பெற்றது. தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் உரையாற்றியிருந்தனர்.

அத்துடன் அமெரிக்காவை சேர்ந்த 100க்கும் அதிகமான தமிழர்களும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். முள்ளிவாய்க்கால் படு



கொலையின் 15ஆவது வருடத்தினை நினைவேந்தி வருகின்ற நிலையில் இந்த தீர்மானம் அமெரிக்க காங்கிரஸில் சமர்ப்பிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த கோரிக்கையினை சனப்பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர் வில்லே நிக்கல் அமெரிக்க காங்கிரஸில் சமர்ப்பித்திருந்தார். இந்த தீர்மானம் சுதந்திரத்திற்கான சர்வஜன வாக்கெடுப்பை முன் வைப்பதாகவும் இவ்வாறான அணுகுமுறை உலகின் பல பகுதிகளில் பின்பற்றப் பட்டுள்ளதாக சனப்பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர் வில்லே நிக்கல் சுட்டிக் காட்டியிருந்தார். தங்களால் இதனை செய்ய முடியும் என்றும் தமிழர்களின் எதிர்காலத்தை அவர்களே தீர்மானிப்பதற்கு தமது பூரணமான ஒத்துழைப்பை வழங்குவதாக வில்லே நிக்கல் உறுதியளித்துள்ளார்.

தமிழர்களிற்கு எதிரான அநீதி உலகில் நீதிக்கான அச்சுறுத்தல் என குறிப்பிட்ட அவர் 2009 ஆண்டு அது இனப்படுகொலைக்கு இட்டுச 'சென்றதாக சுட்டிக் காட்டினார்

# காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக சர்வதேசம் ஒத்துழைப்பு வழங்கத் தயார்

இலங்கைக்கு முதன்முறையாக விஜயம் மேற்கொண்டுள்ள சர்வதேச மன்னிப்புச்சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் 18 மே 2024 பங்கேற்றிருந்தார். சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் கடந்த 16ஆம் திகதி நாட்டை சென்றடைந்திருந்தார். அத்துடன் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருந்தார்.

இந்நிலையில் இறுதிக் கட்ட யுத்தத்தில் உயிர் நீத்த உறவுகளை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலிலும் பங்கேற்றிருந்தார்.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்ட அவர் யுத்தத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக சர்வதேசம் ஒத்துழைப்பு வழங்க தயாராக இருப்பதாக தெரிவித்தார்.



அத்தோடு, இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூறுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தால் இது சாத்தியம் எனவும் சர்வதேச மன்னிப்புச்சபையின் செயலாளர் நாயகம் தெரிவித்தார்

இதேவேளை இலங்கைக்கு முதன் முறையாக விஜயம் மேற்கொண்டுள்ள சர்வதேச மன்னிப்புச்சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட் முல்லைத்தீவில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஈழத்தமிழர்களுக்கு நீதியை வழங்குவது தொடர்பில் பிரிட்டன் தீர்க்கமான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்!

ஆயுதமோதலின் இறுதிநாட்களில் தமிழர்களிற்கு எதிராக இடம் பெற்ற படுகொலைகளிற்கு நீதியும் பொறுப்புக்கூறலும் அவசியம் என பிரிட்டனின் தொழில்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தங்கம் டெபனயர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இலங்கையின் உள்நாட்டு போரின் இறுதி தருணங்களில் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களையும் இடம் பெற்ற பரந்துபட்ட மனித உரிமை மீறல்களையும் நாங்கள் இன்று நினைவு கூருகின்றோம் என என டிஜிட்டல் கலாச்சாரம் ஊடகம் விளையாட்டு நிழல் அமைச்சர் தங்கம் டெபனெயர் தெரிவித்துள்ளார்.

18 மே 2024 எனது சிந்தனைகள் தாங்கள் எதிர்கொண்ட அநீதிகள் காரணமாக தொடர்ந்தும் வேதனையுடன் வாழும் பாதிக்கப்பட்டவர்கள் உயிர் பிழைத்தவர்கள் அவர்களின் அன்புக்குரியவர்கள் குறித்து காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் என்பது எப்படி இழந்தவர்களை நினைகூரும் நாளோ அதேபோன்று குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் நாள் என டிஜிட்டல் கலாச்சாரம் ஊடகம் விளையாட்டு நிழல் அமைச்சர் தங்கம் டெபனெயர் தெரிவித்துள்ளார்.

மோதல் முடிவிற்கு வந்த பின்னர் இலங்கை அரசாங்கத்திற்கு 15 வருடங்கள் கிடைத்தன எனினும் அர்த்தபூ ர்வமான விசாரணையை அது முன்னெடுக்காமல் விரக்தியை ஏற்படுத்தியுள்ளது என குறிப்பிட்டுள்ள அவர் தமிழ் மக்களிற்கு நீதியை வழங்குவது குறித்த உத்தரவாதங்களை நிறைவேற்ற தவறி விட்டது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டிஸ் அரசாங்கம் தமிழ் மக்களிற்கு ஆதரவை வழங்க வேண்டும் இலங்கை அரசாங்கம் நீதி மற்றும் பொறுப்புக்கூறலை ஊக்குவிப்பதை உறுதி செய்வதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என நான் வலியுறு



த்தி கேட்டுக் கொள்கின்றேன்

யுத்த குற்றங்களில் ஈடுபட்டவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்துவது தொடர்பான ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளரின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது ஆராய்வதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார்.

மே மாதம் முதல் குறுகிய காலத்திற்கு மாதம் இரு முறையாக வெளிவரும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் அடுத்த அச்சுப் பத்திரிகையை 31 மே 2024 வெள்ளிக்கிழமை அனைத்து வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு 416 841 9600

# தென்னிலங்கை புரிந்து கொள்ள வேண்டியது

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் என்னும் பெயரில் இயங்கி வரும் அமைப்பு, அமெரிக்காவின் உதவியுடன் ஈழவாதிகள் நாட்டைப் பிரிக்க முற்படுகின்றார்கள் என்றவாறு ஒரு கதையை கூறியிருக்கின்றது. அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர், ஈழத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் தொடர்பில் சுதந்திர வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று தெரிவித்திருப்பதை மேற்கோள் காட்டியே, மேற்படி அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருக்கின்றது.

ஓர் இறைமையுள்ள நாட்டில் பொதுசன வாக்கெடுப்பை அரசாங்கத்தின் அனுமதியின்றி நடத்த முடியாது ஐக்கிய நாடுகள் சபையின் மேற்பார்வையில், குறித்த நாட்டின் அனுமதியுடன் தான் அவ்வாறான வாக்கெடுப்பை நடத்த முடியும். இந்த உண்மையானது, குறித்த தேசப்பற்றுள்ளவர்களுக்கும் தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை ஆனால், தங்களின் இனவாத மூளையைத் திருத்திக் கொள்ள மாட்டோம் என்று அடம்பிடிக்கும் கூட்டமொன்று, தமிழ் மக்களை இரண்டாம் தரமாக்கும் முயற்சியில் இறுதியில், ஒட்டுமொத்த இலங்கைத் தீவையும் வங்குரோத்து நிலைக்குள் தள்ளியிருக்கின்றது என்பதே உண்மையாகும்.

இதனை இனியும் சிங்கள தேசம் புரிந்து கொள்ளவில்லையாயின் அவர்களை கௌதம புத்தர் தான் காப்பாற்ற வேண்டும். முதலில் தேசப்பற்று என்றால் என்ன? எப்போதும் தமிழ் மக்களை இரண்டாம் தரமாக்க முயற்சிப்பது தான் தேசப்பற்றா? இவ்வாறானவர்கள் ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் ஏன் இவ்வாறான கோரிக்கைகள் எழுகின்றன? அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர் இவ்வாறு கூறுவதற்கு யார் காரணம்?

யுத்தம் முடிவுற்று பதினைந்து வருடங்களாகி விட்டன. இந்தப் பதினைந்து வருடங்களில் தமிழ் மக்களின் மனக்குறைகளை, அரசியல் கோரிக்கைகளை ஆகக் குறைந்தளவு கூட தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கங்களினால் முன்னெடுக்க முடியவில்லை. அவ்வாறான மனக்குறைகளை போக்குவதற்குப் பதிலாக, அந்த மனக்குறைகள் நியாயமானது என்பதை தமிழ் மக்கள் இன்னும் ஆழமாகப் புரிந்து கொள்ளக் கூடியவாறான செயல்பாடுகளில் தானே, ஆட்சியாளர்கள் முனைப்பு காண்பித்திருக்கின்றனர்.

இறந்த தங்களின் உறவுகளை நினைவு கூர்ந்து, சிரட்டையில் கஞ்சி அருந்துவதைக் கண்டே, நீங்கள் ஏன் அஞ்சுகின்றீர்கள்? ஆட்சியா ளர்கள் சரியான பாதையில் பயணித்தால், ஏன் கஞ்சியை பார்த்து அஞ்ச வேண்டும்?

இப்படியான காரணங்களால் தானே, இவ்வாறான கோரிக்கைகள் எழுகின்றன. தமிழ் மக்கள் மத்தியில் இணைந்து வாழவேண்டும் என்னும் எண்ணத்தை ஏற்படுத்த வேண்டியவர்கள் யார்?, அந்தப் பொறுப்பு யாருக்குரியது? பெரும்பான்மை மக்கள் மத்தியிலிருந்தல்லவா இந்தக் கரிசனை வெளிப்பட்டிருக்க வேண்டும். உங்கள் மத்தியிலிருந்து ஆக்கபூர்வமான விடயங்கள் எதுவும் கடந்த பதினைந்து வருடங்களில் இடம பெறாத காரணத்தினால் தானே அமெரிக்கக் காங்கிரஸ் உறுப்பினர்கள் இவ்வாறு பேச வேண்டியேற்படுகின்றது.

புலம்பெயர் சமூகத்திலிருப்பவர்கள் இவ்வாறான விடயங்களில் நாட்டம் காண்பிக்க வேண்டியிருக்கின்றது. பந்து இப்போது தென்னிலங்கையிடம் இருக்கின்றதே தவிர, அது தமிழ் மக்களிடம் இல்லை. எனவே தேசப்பற்று என்னும் பேரில் சிங்கள மக்களை ஏமாற்றும் செயல்பாடுகளை விடுத்து தமிழ் மக்களை சமபங்காளி யாகக் கொண்டு, இலங்கையை கட்டியெழுப்புவது தொடர்பில் கவனம் செலுத்துங்கள்.


# Condo For Rent

Kennedy / Ellesmere சந்திப்புக்கு அருகில் Freshly Renovated செய்யப்பட்ட 3 Bed rooms 1 Washroom கொண்ட Condo உடனடியாக வாடகைக்கு விடப்படும். கார் தரிப்பிடம், T.V, இன்டர்நெட் இலவசம். 24 மணி நேர பஸ் சேவை மற்றும் தமிழ் வர்த்தக நிலையங்கள் மளிகைக் கடைகள் அருகில் அமைந்துள்ள குடியிருப்புக்கு மிகவும் உகந்த இடம்.

தொடர்புகளுக்கு 416 757 0034

# மௌனித்த பல கதைகள் நீடித்த அரசியல் தீர்வின் அவசியத்தை வலியுறுத்துகின்றது - அமெரிக்கத் தூதுவர்



நீதி, சம உரிமைகள் மற்றும் சம வாய்ப்புகளை பெற்றுக் கொள்வதில் ஈடுபாட்டுடன் போராடும் இலங்கை மக்களின் உறுதியான பங்காளியாக அமெரிக்கா என்றும் இருக்கும் என்று தெரிவித்துள்ள அமெரிக்க தூதுவர் ஜூலி சங், மௌனிக்கப்பட்ட பல கதைகள் நீடித்த அரசியல் தீர்வின் அவசியத்தை வலியுறுத்துவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் அரச படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான மூன்று தசாப்த கால போர் முடிவடைந்து 15 வருடங்கள் ஆகின்ற நிலையில் வடக்கு மற்றும் கிழக்கில் போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து பல்வேறு நிகழ்வுகள் இடம் பெற்றன.. இவ்வாறானதொரு நிலையில் வடக்குக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்க தூதுவர் ஜூலி சங், யாழ்ப்பாணத்தில் அரச மற்றும் சிவில் தரப்புகளை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

குறிப்பாக உள்நாட்டுப் போரின் போது வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர், முன்னாள் போராளிகள் மற்றும் முன்னாள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டக் கைதிகளின் குடும்பங்களை சந்தித்து கலந்துரையாடியிருந்தார். அன்புக்குரியவர்களை நினைவு கூர அனைத்துகுடும்பங்களுக்கும் உரிமை உண்டு என இதன்போது தெரிவித்திருந்த அமெரிக்க தூதுவர், மௌனித்த இவர்களின் கதைகள் நீடித்த அரசியல் தீர்வின் அவசியத்தை வலியுறுத்துவதாகவும் குறிப்பிட்டார்.

இவ்வாறானதொரு நிலையில் இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவடைந்து 15 ஆண்டுகளை நினைவுகூர்ந்து அமெரிக்க தூதுவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பக்க பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவடைந்து 15 ஆண்டுகளை நிறைவடைந்துள்ளது. ஐக்கியப்பட்ட எதிர் காலத்துக்கான பின்னடைவு மற்றும் நம்பிக்கையை பிரதிபலிக்கும் வகையில், அனைத்து இலங்கையர்களுடனும் அமெரிக்கா துணை நிற்கிறது. நீதி, சம உரிமைகள் மற்றும் சம வாய்ப்புகளை பெற்றுக் கொள்வதில் ஈடுபாட்டுடன் போராடும் இலங்கை மக்களின் உறுதியான பங்காளியாக அமெரிக்கா என்றும் இருக்கும்.

நிலையான சமாதானம் மற்றும் முன்னேற்றத்துக்கான பன்முகத் தன்மையை உள்ளடக்கிய வளமான எதிர்காலத்தை நோக்கிய இலங்கையின் பயணத்துக்கான அமெரிக்காவின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதி செய்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

## இனப்படுகொலை உட்பட சர்வதேச குற்றங்களை விசாரணை செய்ய சர்வதேச நீதிப்பொறிமுறை அவசியம் - அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை இடம் பெற்று 15 வருடங்களாகின்ற நிலையில் தமிழ் மக்கள் 2009 இனப் படுகொலைகளை நிவைுகூரும் போது அவர்களிற்கு தங்கள் ஆதரவை வெளியிடுவதாக அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

2009ம் ஆண்டு யுத்தத்தின் இறுதி தருணங்களின் போது அரசாங்கத்தின் ஆதரவுடன் இடம் பெற்ற இனப்படுகொலையின் போது கொல்லப்பட்டவர்கள் உயிர் பிழைத்தவர்களை உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்கள் நினைவுகூரும் போது நான் அவர்களிற்கு ஆதரவாக உள்ளேன் என அமெரிக்க சனப்பிரதிநிதிகள் சபையின் பிரதி சம்மர் லீ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போதியளவு நீதியின்மை இந்த பயங்கரமான குற்றங்களிற்கு காரணமான யுத்த குற்றவாளிகள் அந்த நாட்டில் அதிகாரத்தை



அனுபவிக்க அனுமதியளித்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் இடம் பெற்ற இனப்படுகொலை உட்பட சர்வதேச குற்றங்களிற்கு காரணமானவர்களை விசாரணை செய்வதற்காக சர்வதேச குற்றவியல் நீதிப்பொறிமுறையொன்றை உருவாக்க வேண்டும் என நான் வேண்டுகோள் விடுக்கின்றேன் என தெரிவித்துள்ள அவர் நீதி



வழங்கப்பட்ட பின்னரே அர்த்தபூர்வமான அமைதியையும் ஸ்திரதன்மையையும் ஏற்படுத்த முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார் தமிழ் இனப்படுகொலை தினமான 18 மே 2024 இலங்கையின் உள்நாட்டு போரின் போது துயரம் தரும் விதத்தில் பறிக்கப்பட்ட உயிர்களை நினைவு கூருவதில் தமிழர்களுடன் நானும் இணைந்து கொள்கின்றேன் என உறுப்பினர் டெபோராரோஸ் தெரிவித்துள்ளார்.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# மனித உரிமைகளை பாதுகாக்கும் நடவடிக்கைகளை கனடா ஒருபோதும் நிறுத்தாது - பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ



சர்வதேச அளவில் மனித உரிமைகளை பாதுகாக்கும் நடவடிக்கைகளை கனடா ஒரு போதும் நிறுத்தாது என தெரிவித்துள்ள கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இலங்கையில் யுத்த குற்றங்களில் ஈடுபட்ட இராணுவ அதிகாரிகளிற்கு எதிராக தடைகளை விதித்ததை சுட்டிக்காட்டியுள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வினை குறிக்கும் விதத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது

15 வருடங்களிற்கு முன்னர் இலங்கையின் உள்நாட்டு மோதல் முடிவிற்கு வந்தது முள்ளிவாய்க்கால் படுகொலை உட்பட பல ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் உயிர்களை இழந்தனர். இன்று வரை பலர் காணாமல் போயுள்ளனர் காயமடைந்துள்ளனர் இடம் பெயர்ந்துள்ளனர்.

இன்று நாங்கள் பாதிக்கப்பட்டவர்கள் உயிர் பிழைத்தவர்கள் அர்த்தமற்ற நீண்டகால வன்முறை ஏற்படுத்திய வேதனை வலியுடன் வாழும் அவர்களின் அன்புக்குரியவர்களை நாங்கள் கௌரவிக்கின்றோம்.

இரண்டு வருடங்களிற்கு முன்னர் மே 18ம் திகதியை தமிழர்கள் இனப்படுகொலை நினைவேந்தல் தினமாக அங்கீகரிப்பதற்கான தீர்மானத்திற்கு கனடா நாடாளுமன்றம் ஏகமனதாக வாக்களித்தது.

மோதல்களின் போது இடம் பெற்ற குற்றங்களிற்காகவும் இலங்கையின் அனைத்து மக்களும் எதிர் கொள்ளும் துயரங்களிற்காகவும் நாங்கள் எப்போதும் நீதியையும் பொறுப்புக்கூறலையும் பரப்புரை செய்கின்றோம்.

2023இல் இலங்கையின் ஆயுத மோதலின் போது மனித உரிமைகளை மீறிய இலங்கை இராணுவ அதிகாரிகள் நால்வருக்கு எதிராக நாங்கள் தடைகளை விதித்தோம்.

இலங்கையில் மனித உரிமைகளை கனடா வலுவான விதத்தில் பாதுகாக்க முயல்கின்றது. 2022 ஒக்டோபரில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாக நிறைவேற்றும் நடவடிக்கைகளில் எங்கள் சர்வதேச சகாக்களுடன் இணைந்து ஈடுபட்டுள்ளோம். இந்த தீர்மானம் இலங்கையில் அதிகளவான நல்லிணக்கம் நீதி பொறுப்புக்கூறல் மனித உரிமைகள் ஆகியவற்றிற்கு வேண்டுகோள் விடுக்கின்றது.

இலங்கை அரசாங்கத்தை மத நம்பிக்கை மற்றும் பன்முகத் தன்மை ஆகியவற்றிற்கான சுதந்திரத்தை மதிக்குமாறு நாங்கள் தொடர்ந்தும் வலியுறுத்துகின்றோம். இவை நிரந்தர சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கு அவசியமான விழுமியங்களாகும்.

இன்றைய நாள் மனித உரிமைகள் நீதி பொறுப்புக்கூறல் ஆகியவற்றிற்கு குரல்கொடுக்கும் ஆதரவளிக்கும் எங்களின் கூட்டு கடப்பாட்டை நினைவுபடுத்துகின்றது

சர்வதேச அளவில் மனித உரிமைகளை பாதுகாக்கும் நடவடிக்கைகளை கனடா ஒருபோதும் நிறுத்தாது என்றார்.

# இனப்படுகொலையை நிராகரிக்கும் இலங்கை அரசு! சர்வதேசத்தில் திட்டமிட்டு பிழையான தகவல் பரப்பு

இனப்படுகொலையை நிராகரிக்கும் இலங்கை அரசாங்கம் சர்வதேச தலையீடுகளில் ஈடுபடுவதுடன் திட்டமிட்டு பிழையான தகவல்களை வெளியிடுதல் பரப்புதல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளது என கனடா பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுன் தெரிவித்துள்ளார்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார் தமிழ் இனப்படுகொலை தினம் என குறிப்பிடப்படும் முள்ளிவாய்க்கால் படுகொலையின் 15 வருடத்தை குறிக்கின்றது என பட்ரிக் பிரவுண் குறிப்பிட்டுள்ளார்.

2009ம் ஆண்டு ஆயுதமோதலின் இறுதி தருணங்களில் அரச ஆதரவுடன் இடம் பெற்ற இனப் படு கொலையில் பலியானவர்கள் உயிர் பிழைத்தவர்களை உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்கள் நினைவுகூரும் இந்த தருணத்தில் நான் எனது ஆதரவை அவர்களிற்கு வெளியிடுகின்றேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த குற்றங்களிற்கும் யுத்தத்தின் போதும் அதன் பின்னரும் இடம் பெற்ற வலிந்து காணாமலாக்கப் பட்ட சம்பவங்களிற்கும் கண் மூடித்தனமான தடுத்து வைத்தல் சித்திரவதைகள் நீதி பொறுப்புக் கூறலை உறுதி செய்வதற்கான எந்த நேர்மையான நடவடிக்கைகளையும் இன்று வரை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனை விட மோசமான விடயம் என்னவென்றால் இடம் பெற்ற இனப்படுகொலையை நிராகரிக்கும்



இலங்கை அரசாங்கம் சர்வதேச தலையீடுகள் திட்டமிட்டு பிழையான தகவல்களை வெளியிடுதல் பரப்புதல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினக் கைதுகள்! அமெரிக்க செனெட் வெளியுறவுக்குழு கவலை!

இலங்கையின் ஈவிரக்கமற்ற உள்நாட்டு யுத்தத்தின் போது கொல்லப்பட்ட பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட சித்திரவதை செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழர்களை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் தினத்தை அடிப்படையாக கொண்டு இடம் பெற்ற கைதுகள் குறித்து கவலையடைந்துள்ளதாக அமெரிக்க செனெட் வெளியுறவுக்குழுவின் தலைவர் செனெட்டர் கார்டின் தெரிவித்துள்ளார். கைதுகள் குறித்த அச்சமின்றி நினைவேந்தல்களை முன்னெடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது இவ்வாறிருக்க தமிழ் மக்கள் தொடர்பில் மேற்கு நாட்டு இராஜதந்திரிகள் தனது கடமையை சரியாக செய்யவில்லையென தமிழ்



முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் குற்றம் சுமத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், வருடா வருடம் முரண்பாடுகள் மற்றும் கைதுகள் ஏற்படாமல் இறந்து போன கொல்லப்பட்ட தமது உறவுகளை நினைத்து நினைவேந்தலை நடத்துவதற்கான உரிமையை இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு உறுதிபடுத்த சர்வதேச சமூகம் தவறி விட்டது.

இந்த குறைந்த பட்ச உண்மையை இலங்கை ஆட்சியாளர்கள் தலையில் புகுத்துவதற்கு யுத்தம் முடிந்து 15 வருடங்கள் ஆகி விட்டது.

இருப்பினும் இது குறித்து திட்டவட்டமாக இலங்கை அரசாங்கத்திற்கு உரிய முறையில் சர்வதேச சமூகத்தால் மற்றும் ஐக்கிய நாடுகளால் உறுதியாக சொல்லப்படவில்லை. இதுவே இங்கு பிரச்சினை. அன்று அகோர யுத்தத்திற்கு முழுமையான ஆதரவு ஒத்துழைப்புகளை அன்றைய இலங்கை அரசுக்கு வழங்கிய சர்வதேச சமூகம், தமிழர்களை பார்த்து யுத்தம் முடிந்த உடனேயே அரசியல் தீர்வையும் மற்றும் பொறுப்பு கூறலையும் பெற்று தருவதாக தமிழ் மக்களின் பிரதிநிதிகளிடம் உறுதி கூறியது" என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அரசியலில் சிந்தனை மாற்றம் அவசியம்

தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பான உரையாடல்களும் அதனை எதிர்க்கும் கருத்துகளும் ஒரு விடயத்தைத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றது. அதாவது, தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் புதிய அணுகுமுறைகளை பரிசோதிக்க அரசியல்வாதிகள் அஞ்சி நடுங்குகின்றனர். அவர்களின் நடுக்கமும் தடுமாற்றமுமே எதிர்ப்பாகவும் அவநம்பிக்கையாகவும் வெளிப்படுகின்றது. இது சரி வருமா– சாத்தியமா என்பதில் தொடங்கி இதற்கு பின்னால் யாரோ இருப்பதான கதைகள் வரையில் அனைத்துமே அரசியல்வாதிகளின் இயலாமையிலிருந்தே வெளிவருகின்றன.

தங்களின் இயலாமைகளை மறைத்துக் கொள்வதற்காக அவர்கள் பயன்படுத்தும் சொற்கள்தான். அவசரப்படக்கூடாது நிதானமாக செயல்பட வேண்டும் பொறுமையாக இருக்க வேண்டும் விடயங்களை முதலில் அவதானிக்க வேண்டும். கடந்த பதினைந்து வருடங்களாக இவ்வாறான சொற்கள் தானே மீண்டும் மீண்டும் கூறப்பட்டன. ஆனால், ஒரு சிறிய மாற்றத்தைக் கூட இந்த அரசியல் தரப்புகளால் ஏற்படுத்த முடியவில்லையே பின்னர் எந்த அடிப்படையில் மீண்டும் இவ்வாறான சொற்களுடன் பொது வெளிக்கு வருகின்றீர்கள்? கடந்த பதினைந்து வருடகால அரசியல் தோல்விகளுக்கு காரணமானவர்கள் எவ்வாறு புதிய நகர்வுகளை பிழையென்று கூற முடியும்?

தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதை வெளிப்படுத்தும் நோக்கில் ஜனாதிபதித் தேர்தலை பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று சிவில் சமூக அமைப்புகள் கூறுகின்ற போது அதனை ஏன் எதிர்க்க வேண்டும்? அந்த முயற்சியை மேற்கொள்வதற்கான வழியை ஏற்படுத்திக் கொடுப்பதால் அரசியல் தலைவர்கள் என்று தங்களை அடையாளப்படுத்திக் கொள்வோருக்கு என்ன பிரச்னை உண்டு? ஏன் அதனை எதிர்க்க வேண்டும்?

யுத்தத்துக்கு பின்னரான கடந்த பதினைந்து வருடங்களில் மேற் கொள்ளப்பட்ட அனைத்து அரசியல் முன்னெடுப்புக்களும் அந்த முன் னெடுப்புக்களுக்கான தீர்மானங்களும் சம்பந்தன் என்னும் ஒருவராலேயே மேற்கொள்ளப்பட்டது.

அவ்வாறான முடிவுகளின் போது அதனை அமைதியாக அனுமதித்துக் கொண்டிருந்தவர்கள் என்னும் வகையில் பங்காளிக் கட்சிகள் மற்றும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொறுப்பு உண்டு. இந்தக் காலத்தில் சிவில் சமூக அமைப்புகள், புத்திஜீவிகள், கருத்துருவாக்கிகள் எனப் பலராலும் முன்வைக்கப்பட்ட எந்தவோர் ஆலோசனைகளையும் சம்பந்தன் தரப்பு கருத்தில் கொள்ளவில்லை. ஆகக் குறைந்தது செவிமடுப்பதற்கான ஆர்வத்தைக் கூட காண்பிக்கவில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் கடந்த பதினைந்து வருட கால சம்பந்தனின் அனைத்து அரசியல் தீர்மானங்களும் படு மோசமான தோல்வியை சந்தித்திருக்கின்றது. பொதுவாக தமிழ் அரசியல் சூழலில் ஒரு பண்பு உண்டு.

தங்களின் தோல்விக்கு எவருமே பொறுப்பெடுப்பதில்லை. கேட்டால், நாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்னும் இலகுவான பதிலுடன் விடயங்களுக்கு முற்றுப் புள்ளியிட்டுக் கொள்வது உண்டு. ஏமாற்றப்படுகின்றீர்கள் அவர்கள் ஏமாற்றத்தை மட்டுமே தருவார்கள் என்றால் பின்னர் எதற்காக மீண்டும் ஏமாறுவதற்கு தயாராக இருக்கின்றீர்கள் தமிழ் மக்களையும் ஏமாறுமாறு கூறுகின்றீர்கள்? இன்று தமிழ் மக்களுக்கு தேவையான அரசியல் என்பது முன்னையதை அப்படியே பிரதி செய்யும் அரசியல் அணுகுமுறையல்ல.

மாறாக, புதிய சூழலுக்கு ஏற்ப தமிழ்த் தேசிய அரசியலுக்கு புதிய இரத்தம் பாய்ச்ச வேண்டியிருக்கின்றது. ஜனநாயக சூழலுக்கு ஏற்ப தமிழர் அரசியலை செப்பனிட வேண்டியிருக்கின்றது. அடிப்படையில் ஒரு சிந்தனை மாற்றம் தேவைப்படுகின்றது.

மே மாதம் முதல் குறுகிய காலத்திற்கு மாதம் இரு முறையாக வெளிவரும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் அடுத்த அச்சுப் பத்திரிகையை 31 மே 2024 வெள்ளிக்கிழமை அனைத்து வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்புகளுக்கு 416 841 9600

# போர் வெற்றியல்ல! மனித குலத்தின் தோல்வி! சிங்கள அரசியல்வாதிகளுக்கு ஞானம் பிறந்தது

போர் என்பது வெற்றியல்ல அது நாட்டினதும் அல்லது மனித குலத்தினதும் தோல்வியாகும். 30 வருடகால யுத்தம் இழப்புக்களை மாத்திரமே மிகுதியாக்கியுள்ளது. வெறுப்புக்கு பதிலாக அன்பை வெளிப் படுத்துவோம் என முன்னாள் ஜனாதி பதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க நாட்டு மக்களிடம் வலியுறுத்தியுள்ளார்.

30 வருடகால யுத்தம் முடிவடைந்து 18 ஆம் திகதி சனிக்கிழமையுடன் 15 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. இதனை முன்னிட்டு விசேட ஊடக அறிக்கையை வெளிட்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

போர் என்பது வெற்றியல்ல, அது நாடு அல்லது மனித குலத்துக்கு பாரிய தோல்வியாகும்.. 30 வருடகால இனப் போராட்டம் காரணமாக நாடு பலவற்றை இழந்தது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தாய்மார் தங்களின் பிள்ளைகளை இழந்தனர். அதேபோல் பிள்ளைகள் தமது பெற்றோரை இழந்தனர்.

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என இன அடிப்படையில் நாம் பிளவடைந்துள்ளோம். இந்த யுத்தத்தின் காரணமாக நான் எனது கண்ணை இழந்தேன். மேலும் பல இழப்புக்களை எதிர் கொண்டேன். இறுதி யுத்தத்தின் முடிவை நினைவு கூறும் இன்றைய தினத்தில் வெறுப்புக்கு பதிலாக அன்பை பகிர்வோம். பழி வாங்குவதற்கு பதிலாக மன்னிக்கவும், மனங்களில் பிசாசுகளுக்கு பதிலாக கடவுளை நிலைப்படுத்தவும் ஒருவருக்கொருவர் ஆறுதலை பரி மாற்றிக் கொள்ளவும்



இன்றைய தினத்தில் உறுதியளிப்போம் எனவும் அவர் தெரிவித்தார்.

## கரு ஜயசூரியா

யுத்த காலத்தில் இறந்தவர்கள், காணாமல் போனவர்கள் விடயத்தில் ஒட்டுமொத்த சமூகமும் உணர்வுபூர்வமாக செயல்பட வேண்டியுள்ளது என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கரு ஜயசூரிய கோரியுள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யுத்த காலகட்டத்தில் உயிரிழந்த மற்றும் காணாமல் போன இலங்கை பிரஜைகளை நினைவு கூர்ந்து மூதூரில் கஞ்சி வழங்குவதற்கு செய்திருந்த ஏற்பாடுகளுக்கு அரச அதிகாரிகள் எதிர்வினை ஆற்றியிருப்பது தொடர்பில் நாம் மிகுந்த வருத்தம் அடைகின்றோம். தமக்கு நெருக்கமானவர்களின் மரணம் மற்றும் காணாமல் போனவர்கள் பற்றி பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கு இருக்கும் மனவேதனையை நாம் ஒரு சமூகம் என்ற வகையில் உணர்வுபூர்வமாக புரிந்து கொள்ள வேண்டும். மேலும் இந்த நாட்டை இருண்ட யுகத்துக்குள் கொண்டு செல்லாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பது ஒட்டுமொத்த சமுதாயத்தினரதும் பொறுப்பாகும்.



அதற்கமைய அரச அதிகாரிகள் உள்ளிட்ட ஒட்டுமொத்த சமூகமும் இது போன்ற சூழ்நிலைகளின் போது நாட்டின் பொது நலனை முதன்மையாக கருதி செயல்பட வேண்டும். அப்படி இல்லாவிட்டால் எமது நாட்டை மீண்டும் இருளில் தள்ளுவதற்கு அதுவே காரணமாக அமையக்கூடும்.

ஆகையால், சமூக நீதிக்கான தேசிய இயக்கம் என்ற வகையில், நாம் கடந்த காலங்களில் இந்த நாட்டில் இடம் பெற்ற பல்வேறு துர்பாக்கிய சம்பவங்களினால் உயிரிழந்த மற்றும் காணாமல் போன அனைவரை எண்ணியும் மிகுந்த மன வேதனை அடைகின்றோம்.

மீண்டும் இது போன்ற சூழல்கள் ஏற்படுவதை தடுப்பதற்கும், அவர்கள் அனைவருக்கும் நீதியை நிலைநாட்டுவதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்படுமாறு அனைத்து தரப்புகளிடத்திலும் கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது.

இதேவேளை பொலிஸாரை ஏவிவிட்டு கொலைக் கலாசாரத்தின் நாயகர்களாக அரசியல் செய்கின்றவர்களின் முகமூடிகள் அகற்றப்படல் வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட சர்வமத ஒன்றியத்தின் செயலாளர் அருட்தந்தை கந்தையா ஜெகதாஸ் தெரிவித்துள்ளார்.

கிழக்கு ஊடக மன்றத்தில் இடம் பெற்ற ஊடகவியலார் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறுகையில் முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவை முன்னிட்டு கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் பொலிஸார் சாதாரண மக்களைப் போல் நடந்து கொள்ளாமல் ஒரு அடாவடிக் கும்பலைப் போன்று செயற்பட்டுள்ளார்கள்.

கஞ்சிப்பானையை காலால் தட்டி வீழ்த்தி, அடுப்பினுள்ளே நீரூற்றி மிகவும் சிறுமைத்தனமான முறையில் பொலிஸார் எனப்படுகின்ற இலங்கை அரசின் ஏவல் அதிகாரிகள் மிகவும் கீழ்த்தரமான முறையில் நடந்துக் கொண்டுள்ளார்கள். எனவே இந்த மண் ணிலே இருந்து கொண்டு பொலி ஸாரை ஏவிவிட்ட கொலைக் கலாசார த்தின் நாயகர்களாக அரசியல் செய் கின்றவர்களின் முகமூடிகள் அகற்றப்படல் வேண்டும்என கூறியுள்ளார்.





வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  Give you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca


Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience in the field of Insolvency



Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca





# இந்தியா வந்த பிரபாகரனிடம் ராஜீவ்காந்தி சொன்னது என்ன?

நூலாசிரியர்
- மணிசங்கர் அய்யர் -

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி குறித்து முன்னாள் மத்திய அமைச்சர் மணி சங்கர் அய்யர் எழுதியிருக்கும் 'எனக்குத் தெரிந்த ராஜீவ்' (The Rajiv I Knew) என்ற நூல், இந்தியா - இலங்கை ஒப்பந்தம் குறித்து ராஜீவின் உள்வட்டத்தில் இருந்த ஒரு நபரின் பார்வையில் சில நுணுக்கமான தகவல்களை முன்வைக்கிறது.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் மாநிலங்களவை உறுப்பினராகவும் மத்திய அமைச்சராகவும் இருந்த மணி சங்கர் அய்யர் தற்போது ராஜீவ் காந்தி பிரதமராக இருந்த காலகட்டம் குறித்து விரிவான புத்தகம் ஒன்றை எழுதியிருக்கிறார். இதில் சர்ச்சைகள் என்ற பகுதியில் இந்திய அமைதி காக்கும் படை இலங்கைக்கு அனுப்பப்பட்ட விவகாரம், போஃபர்ஸ் ஆகியவை விவரிக்கப்பட்டிருக்கின்றன.

### யாரையும் ஆலோசிக்காமல் ராஜீவ் எடுத்த முடிவு

இதில் இலங்கைக்கு இந்திய அமைதி காக்கும் படையை அனுப்பியது மிக மோசமான முடிவு எனக் குறிப்பிட்டிருக்கிறார் மணிசங்கர் அய்யர். இந்திய அமைதி காக்கும் படையை அனுப்ப இந்தியா எப்படி ஒப்புக் கொண்டது என்பது குறித்தும் ஒரு புதிய தகவலைச் சொல்கிறார் மணி சங்கர் அய்யர்.

ராஜீவ் - ஜெயவர்தனே ஒப்பந்தம் கையெழுத்தானதும் அருகிலிருந்த அறைக்குள் ராஜீவை அழைத்துச் சென்றார் இலங்கை அதிபர் ஜெயவர்தனே. நாட்டின் இரு முனைகளிலும் நிகழும் இரு வேறு உள்நாட்டுக் கலகங்களை இலங்கை ராணுவத்தால் சமாளிக்க முடியாது என்பதை ராஜீவிடம் தெரிவித்தார் ஜெயவர்தனே. தலைநகர் கொழும்பில் நடக்கும் வன்முறைகளைக் கூட இராணுவத்தால் சமாளிக்க முடியாது என்றார். ஆகவே ஆயுதம் ஏந்திய தமிழ்க் குழுக்களிடம் இருந்து இலங்கை இராணுவத்தைப் பாதுகாக்க ஒரு அமைதி காக்கும் படையை அனுப்ப வேண்டும் என்றார் ஜெயவர்தனே. தன் மூத்த அமைச்சர்களின் எதிர்ப்பையும் மீறி, இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த ஒப்புக் கொண்டதற்காக இதனைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக 'கொண்டார் ஜெயவர்தனே,' என்கிறது இந்த நூல்.

அந்தத் தருணத்தில் அந்த அறைக்கு வெளியில் காத்திருக்கும் தன் நிபுணர்களைக் கூட கலந்தாலோசிக்காமல் அதற்கு ராஜீவ்காந்தி ஒப்புதல் அளித்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. 'அதற்குப் பிறகு, இந்த வேண்டுகோள், ஒப்பந்தத்தின் இணைப்பாகச் சேர்க்கப்பட்டது. இலங்கை அரசே கேட்டுக் கொண்டாலும் இலங்கையில் இந்தியா இராணுவ ரீதியாகத் தலையிடாது என்ற இந்திரா காந்தியின் நிலைப்பாடு மறு பரிசீலனை செய்யப்பட்டு படைகளை அனுப்ப முடிவு செய்யப்பட்டது,' என்று கூறப்பட்டிருக்கிறது.

ராஜீவ் காந்தியின் முடிவைக் கேட்டு இந்தியாவில் இருந்த நிபுணர்கள் ஆச்சரியமடைந்ததாகவும் இந்நூல் கூறுகிறது. 'ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு, இவ்வளவு அவசரத்துடன் இம் மாதிரி பிரிவுகள் ஒப்பந்தத்தில் சேர்க்கப்படும் என அவர்கள் எதிர்பார்க்கவில்லை. ஆனால் ராஜீவ்காந்தி முடிவெடுத்து, உடனடியாக செயல்படுத்தி விட்டார்,' என்று மணி சங்கர் அய்யர் தனது புத்தகத்தில் கூறுகிறார்.



கடற்படை வீரரால் தாக்கப்பட்ட ராஜீவ்

இது குறித்து மேலும் பேசும் இந்த நூல் ஜெயவர்தனேவின் வேண்டுகோளை ஏற்றதற்கான விலையை ராஜீவ் அடுத்த சில நிமிடங்களிலேயே தரவேண்டியிருந்தது, என்கிறது.

பிரதமருக்கு கடற்படையினரின் பாரம்பரிய மரியாதை (guard of honour) அளிக்கப்பட்ட போது, ஒரு கடற்படை வீரர் தனது துப்பாக்கியின் பின் பக்கத்தால் ராஜீவ்காந்தியைத் தாக்கினார். அந்தத் தாக்குதலில் ராஜீவ் காந்தியின் தலை நொறுங்கி அந்த இடத்திலேயே அவர் கொல்லப்பட்டிருப்பார். ஆனால், தாக்குதல் வருவதை உணர்ந்து கொண்ட பிரதமர் விலகிக் கொள்ளவே, அடி தோள்பட்டையில் விழுந்தது என்கிறது இப்புத்தகம்.

இந்தச் சம்பவத்திற்குச் சில மணி நேரங்களுக்குப் பிறகு பிரதமரின் விமானம் தில்லியில் தரையிறங்கியது. உள்நாட்டுப் பாதுகாப்புச் செயலர் டி.என். சேஷன் அந்தத் தாக்குதல் சம்பவத்தின் வீடியோவை, மணி சங்கர் அய்யரிடம் கொடுத்து தூர்தர்ஷனிடம் கொடுக்கச் சொன்னதாக மணி சங்கர் அய்யர் இந்த நூலில் தெரிவிக்கிறார். அந்த வீடியோ அதன்படியே கொடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கிறார்.

இந்திய அமைதி காக்கும் படை ஆரம்பத்திலிருந்தே ஒரு மோசமான நிகழ்வாக அமைந்தது. ஆரம்பக் கட்டச் சேதங்களுக்குப் பிறகு, இராணுவம் சுதாரித்துக் கொண்டாலும் இது பேரழிவாகவே அமைந்தது. ஆரம்பத்தில், இந்திய அமைதி காக்கும் படை விடுதலை தர வந்த படையாகக் கருதப்பட்டு, யாழ்ப்பாண மக்களால் வரவேற்கப்பட்டது. இந்திய இராணுவத்தின் பாதுகாப்போடு பிரபாகரன் யாழ்ப்பாணத்திற்குத் திரும்ப முடியும் எனக் கருதிய புலிகள் இயக்க உறுப்பினர்களும் இந்த வரவேற்பில் இணைந்து கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்தும் கிழக்குப் பகுதியில் இருந்தும் புலிகளால் துப்பாக்கி முனையில் துரத்தப்பட்ட பிற போராளிக் குழுக்கள் தாங்களும் யாழ்ப்பாணத்திற்கும் கிழக்கிற்கும் திரும்ப முடியும் என்ற நம்பிக்கையில் இந்திய அமைதி காக்கும் படையை வரவேற்றனர்,' என்கிறார் மணி சங்கர் அய்யர்.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் எல்லாப் பகுதிகளிலும் இந்திய அமைதி காக்கும் படை இறங்கிய இடங்களில் எல்லாம் உற்சாக வவேற்பு அளிக்கப்பட்டது. மக்களின் வரவேற்பைப் பார்க்கும் போது, அமைதி காப்பதில் தன் பலத்தைப் பயன்படுத்தியதன் மூலம், தெற்காசியாவில் ஒரு முக்கிய சக்தியாக இந்தியா இராஜதந்திர வெற்றியைப் பெற்றிருப்பதாக இந்திய வட்டாரங்களில் நம்பிக்கை ஏற்பட்டது,' என்கிறார் மணி சங்கர் அய்யர்.

ஆனால் ஒப்பந்தம் கையெழுத்தாகி 24 மணி நேரத்திற்குள் படைகள் அனுப்பப்பட்டதால், இலங்கையின் கள நிலவரம் குறித்து எவ்விதமான தகவல்களும் படைத் தளபதிகளோக்கோ, வீரர்களுக்கோ அளிக்கப்படவில்லை, என்கிறார்.

அமைதிப் படை தரையிறங்கியதிலிருந்து புலிகளுக்கும் அமைதி காக்கும் படைக்கும் இடையில் மோதல் ஏற்படும் காலத்திற்கு இடையில் சுமார் இரண்டு மாதங்கள் இருந்தன. அந்த காலகட்டம் இந்தியாவால் பயன்படுத்திக் கொள்ளப்படவில்லை. இதனால் இலங்கைப் போராளிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையில் அமைதி காக்கும் படையாக இருந்திருக்க வேண்டிய, இந்திய அமைதி காக்கும்படை, தமிழ்ப் போராளிகளோடு மோத வேண்டியதாயிற்று. இது இலங்கையின் வட - கிழக்குப் பகுதியை இந்தியாவின் வியட்னாமாக மாற்றியது,' என்கிறார் மணி சங்கர் அய்யர்.

### இந்தியா வந்த பிரபாகரன்

ஒப்பந்தம் கையெழுத்தான வாரம் விடுதலைப் புலிகள் இயகத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் புது தில்லிக்கு அழைத்து வரப்பட்டதாகச் சொல்கிறது இந்நூல். அவரிடம் ஒப்பந்தத்தின் பிரதி அளிக்கப்பட்டபோதே, பிரச்சனை ஆரம்ப அறிகுறிகள் தெரிய ஆரம்பித்தன, எனவும் சொல்கிறது.

அவர் தில்லி அசோகா ஹோட்டலில் பலத்த காவலுக்கு இடையில் தங்க வைக்கப்பட்டிருந்தார். அந்த ஒப்பந்தத்தைப் படித்துப் பார்த்து விட்டு தன் சகாக்களிடம் கருத்துக்களைக் கேட்க விரும்பினார். அவர். விரைவிலேயே அந்த ஒப்பந்தம் தனக்கு ஏற்புடையதல்ல என்பதை பிரபாகரன் தெளிவுபடுத்தினார்,' என்கிறது இப்புத்தகம். பிரபாகரன் தங்கியிருந்த அறைக்குள் இரகசியமாக நுழைந்த பத்திரிகையாளர் அனிதா பிரதாப்பிடம் இதனை அவர் வெளிப்படையாகவே சொன்னார். அனிதா பிரதாப் பிரச்சனை உருவாவதை புரிந்து கொண்டார். ஆனால், இந்திய அரசக் கட்டமைப்பிலிருந்த யாருக்கும் அது புரிந்திருக்கவில்லை. ராஜீவ்காந்தியின் தனிப்பட்ட வசீகரத்திற்கு பிரபாகரன் பணிந்து விடுவார் என நம்பினார்கள். ஆனால், தில்லியிலிருந்து எப்படித் தப்புவது என்பதைத்தான் பிரபாகரன் யோசித்துக் கொண்டிருந்தார்,' என்று அப்போதிருந்த நிலைமையை விளக்குகிறார் மணி சங்கர் அய்யர்.

பிரதமர் ராஜீவ்காந்தியுடனான சந்திப்பிற்குப் பிறகு அவரது குடும்பத்துடனான விருந்தில் கலந்து கொள்ள பிரபாகரனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. விருந்து முடிந்த பிறகு, தனது மகன் ராகுல்காந்தியை அழைத்த ராஜீவ் தனது குண்டு துளைக்காத கவச உடையை எடுத்து வரும்படி சொன்னார். அதனை பிரபாகரனுக்கு அணிவித்த ராஜீவ், 'உங்களைப் பார்த்துக் கொள்ளுங்கள்' என்று புன்னகையுடன் சொன்னார். இந்த விவகாரம் தொடர்பாக எச்சரிக்கை விடுத்தவர்களிடம் பிரபாகரன் ஒப்புக் கொண்டார். நான் அவரை நம்புகிறேன் என்று பதிலளித்தார் ராஜீவ்,' என்று இந்நூல் கூறுகிறது.

இது குறித்து மேலும் விவரிக்கும் இந்தப் புத்தகம், பிரபாகரன் தனக்கு ஐந்து கோடி ரூபாய் நிதி தேவையெனத் தெரிவித்ததாகச் சொல்கிறது. அந்தப் பணம் கொடுக்கப்பட்டது. ஆனால், இறையாண்மையுள்ள தனி தேசமாக ஈழத்தை அடைவதிலும் பிரபாகரன் உறுதியாக இருந்தார்.

ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு ஆகஸ்ட் 4 ஆம் தேதி சுதுமலையில் நிகழ்த்திய தனது பேச்சிலேயே ஒப்பந்தம் குறித்த முரண்பாட்டை பிரபாகரன் தெரிவித்தார். 'நாங்கள் இந்தியாவையும் அதன் மக்களையும் நேசிக்கிறோம். ஆனால், தமிழ் ஈழத்தை அடையும் இலட்சியத்திற்காக தொடர்ந்து போராடுவோம்' என்றார்.

விரைவிலேயே ஆயுதங்களை ஒப்படைப்பதில் தனக்கு விருப்பமில்லை என்பதை புலிகள் இயக்கத்தினர் அறிவித்து விட்டனர். ஆரம்பத்தில் புலிகளுக்கும் இந்தியப் படைகளுக்கும் இடையிலான உறவு சுமுகமாகவே இருந்தது. இந்தியப் படைகளுடன் எந்த நேரத்திலும் பேசுவதற்காக, ரேடியோ அலைவரிசையும் புலிகளுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டது (ஆனால், இப்படி அலைவரிசையை பகிர்ந்து கொண்டது பிறகு பிரச்சனையாகவே முடிந்தது) என்று இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திலீபனின் மரணம் ஒப்பந்தத்திற்கு எதிரான (22ம் பக்கம் பார்க்க)

# 13வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

# உறவுகளே! மே மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

13 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 13 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

04 மே 2024 - 17 மே 2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 13வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**


## 31ம்நாள் நினைவஞ்சலி



### திரு கணேசன் வேலுப்பிள்ளை

அனலைதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மில்ரன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கணேசன் வேலுப்பிள்ளை (இனமுழக்கம் ஆசிரியர்) அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 23 மே 2024 வியாழக்கிழமையாகும் அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, பாரதி, செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினோர்கள். திரு கணேசன் வேலுப்பிளளை அவர்களை நினைவு கூரும் அன்னாரின் குடும்பத்தினருடன் மூன்று இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 58வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கனகசபை பாலசிங்கம்

புங்குடுதீவு 3ம் வட்டாரம் குறிகாட்டுவானைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த பொறளை பாலன் என்று அன்பாக அழைக்கப்படும் திரு கனகசபை பாலசிங்கம் அவர்களின் 58வது ஆண்டு நினைவுநாள் 16 மே 2024 வியாழக் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு கனகசபை பாலசிங்கம் அவர்களை நினைவுகூரும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தனலெட்சுமி சண்முகலிங்கம்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தனலெட்சுமி சண்முகலிங்கம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 22 மே 2024 புதன்கிழமை அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தனலெட்சுமி சண்முகலிங்கம் அவர்களை நினைவு கூரும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சிவனேஸ்வரி சிவானந்தன்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவனேஸ்வரி சிவானந்தன் அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 18 மே 2024 சனிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளு க்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சிவனேஸ்வரி சிவானந்தன் அவர்களை நினைவு கூரும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு அருளானந்தம் இராசலிங்கம்

சுதுமலை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு அருளானந்தம் இராசலிங்கம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 26 மே 2024 ஞாயிற்றுக் கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக் குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு அருளானந்தம் இராசலிங்கம் அவர்களை நினைவு கூரும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி திலகவதி திருஞானசம்பந்தமூர்த்தி

வேலணை தலைகாட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி திலகவதி திருஞானசம்பந்தமூர்த்தி (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாள் 28 மே 2024 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி திலகவதி திருஞானசம்பந்தமூர்த்தி அவர்களை நினைவு கூரும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## நினைவழியா நினைவஞ்சலிகள்



### திரு செல்லையா சோமசுந்தரம்

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைச் சேர்ந்த திரு செல்லையா சோமசுந்தரம் திருமதி சோமசுந்தரம் செல்வநாயகி ஆகியோரது நினைவு நாளையொட்டி கனடாவில் வசிக்கும் அன்னாரது குடும்பத்தினர் 29 மே 2024 புதன்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு செல்லையா சோமசுந்தரம் திருமதி சோமசுந்தரம் செல்வநாயகி இணையரை நினைவுகூரும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




14 மே 2024 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் சமூக- சமய சேவையாளரும் நிதி ஆலோசகருமான திரு ஆர்.ஆர்.இராஜ்குமார் அவர்களது 60வது பிறந்த நன்னாளாகும். அன்றையதினம் திரு இராஜ்குமார் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




14 மே 2024 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் சமூக- சமய சேவையாளரும் நிதி ஆலோசகருமான திரு ஆர்.ஆர்.இராஜ்குமார் அவர்களது 60வது பிறந்த நன்னாளாகும். அன்றையதினம் திரு இராஜ்குமார் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




14 மே 2024 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் சமூக- சமய சேவையாளரும் நிதி ஆலோசகருமான திரு ஆர்.ஆர்.இராஜ்குமார் அவர்களது 60வது பிறந்த நன்னாளாகும். அன்றையதினம் திரு இராஜ்குமார் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



18 மே 2024 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பிரசாந்தன் சாமினி தம்பதிகளின் செல்வப்புதல்வி வெண்பாவின் 6வது பிறந்த நன்னாளாகும். அன்றைய தினம் செல்வி வெண்பா பிரசாந்தன் தனது பெற்றோர்கள், உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




18 மே 2024 சனிக்கிழமை மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவனேஸ்வரி சிவானந்தன் அவர்களது 5வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




22 மே 2024 புதன்கிழமை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தனலெட்சுமி சண்முகலிங்கம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




23 மே 2024 வியாழக்கிழமை அனலைதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மில்ரன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த முன்னாள் இனமுழக்கம் ஆசிரியர் - அனலை செழியன் என்று அன்பாக அழைக்கப்பட்ட திரு கணேசன் வேலுப்பிள்ளை அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




23 மே 2024 வியாழக்கிழமை அனலைதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மில்ரன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த முன்னாள் இனமுழக்கம் ஆசிரியர் - அனலை செழியன் என்று அன்பாக அழைக்கப்பட்ட திரு கணேசன் வேலுப்பிள்ளை அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




23 மே 2024 வியாழக்கிழமை அனலைதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மில்ரன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த முன்னாள் இனமுழக்கம் ஆசிரியர் - அனலை செழியன் என்று அன்பாக அழைக்கப்பட்ட திரு கணேசன் வேலுப்பிள்ளை அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




23 மே 2024 வியாழக்கிழமை புங்குடுதீவு 11ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திருமதி யோகநாயகி அமரசிங்கம் அவர்களது 80வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி யோகநாயகி அமரசிங்கம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




09 மே 2024 வியாழக்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு ஆறுமுகம் கிருஷ்ணபிள்ளை அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

## 6வேது இனிய பிறந்த நாள் நல்வாழ்த்துகள்



கனடாவில் வசிக்கும்
திரு திருமதி பிரசாந்தன் சாமினி
இணையர்களின்
செல்வப்புதல்வி வெண்பா

கனடாவில் வசிக்கும் திரு திருமதி பிரசாந்தன் சாமினி இணையர்களின் செல்வப்புதல்வி வெண்பா பிரசாந்தனின் ஆறாவது பிறந்த நன்நாள் 18 மே 2024 சனிக்கிழமையாகும். அன்றையதினம இனிய பிறந்த நன்நாளை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடிய செல்வி வெண்பா அன்றைய தினம் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து முல்லைத்தீவு புனிதபூமி பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.

அகவை ஆறு காணும் செல்வி வெண்பா பல்கலையும் கற்றுப் பார் போற்றும் பைந்தமிழ் மகளாக வாழ வேண்டுமென வாழ்த்தும் அவரது பெற்றோர்கள், உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து வாழ்க வளர்கவென வாழத்துகின்றார்கள்.
செல்வி வெணபா பிரசாந்தன் வாழ்க வளமுடனும்! நலமுடனும்! தமிழுடனும்!

# கனடாவில்
# பொங்குதமிழ்

## தாயகம் - தேசியம் - தன்னாட்சி

## எமது நிலம் எமக்கு வேண்டும்

## SEPTEMBER 1, 2024

- சர்வஜன வாக்கெடுப்பு
- தமிழ் இன அழிப்புக்கான பன்னாட்டு விசாரனை
- தமிழரின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படல் வேண்டும்.
- வடக்கு கிழக்கு இணைந்த தமிழரின் தாயகம் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.
- தமிழ் தேசமும் அதன் தனித்துவமான இறைமையும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்

ஊடகங்கள், அமைப்புகள், ஊர்ச்சங்கங்கள்,
விளையாட்டுக் கழகங்கள்,கலைஞர்கள்
அனைவரின் பங்குபற்றுதலுடன்

**கனடா மற்றும் சர்வதேசத்திடம்**
**நீதி வேண்டி...**

**ரொறன்ரோவில் (1.9.2024) ஞாயிறு**
**மாலை 5:00மணிக்கு**

*ஒன்றுபட்டு உறுதிகொண்ட மக்களாய்*
*ஒன்றாயிணைந்து வரலாறு படைப்போம் வாரீர்*

**கனடியத் தமிழர் சமூகமும் மாணவர் சமூகமும்**
**416 573 4646 - 647 855 1318**
**437 925 9160 - 647 631 5691**



உ
ஜெயதுர்க்கா துணை
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

### ஜெயதுர்க்கா தேவஸ்தானம் மிசிசாகா

# விக்னவிநாயகர் அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் 2024



**ஆரம்பம்**
17 - 05 - 2024



திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை.

**பூர்த்தி**
26 - 05 - 2024



நிகழும் குரோதி வருடம் வைகாசி மாதம் 4ம் நாள்[17-05-2024]வெள்ளிக்கிழமை அன்று விக்னங்கள் தீர்க்கும் விக்னவிநாயகப் பெருமானின் அலங்கார உற்சவம் நடைபெற திருவருள் கூடியுள்ளது. இவ்வரிய திருநாட்களில் அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக வருகைதந்து விநாயகப்பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

## விக்னவிநாயகர் அலங்கார உற்சவ விபரம்

மாலை 5.30 அபிஷேகம் [ஸ்நபனம்], 7.00 பூஜை, 7.30 கலை நிகழ்ச்சி, 8.00 வசந்தமண்டபப் பூஜை, தொடர்ந்து அருள் மிகு விக்ன விநாயகர் வீதியுலா வருதல், பிரசாதம் வழங்குதல்.

| | | | | |
|---|---|---|---|---|
| | 16-05-2024 | வியாழன் காலை | கணபதி ஹோமம் | இ.ராகவன் குடும்பம் |
| 1ம் திருவிழா | 17-05-2024 | வெள்ளி | மூஷிக வாகனம் | விசுவலிங்கம் குடும்பம் |
| 2ம் திருவிழா | 18-05-2024 | சனி | யானை வாகனம் | ம.மனோகரன் குடும்பம் |
| 3ம் திருவிழா | 19-05-2024 | ஞாயிறு | சிம்ம வாகனம் | இராஜகுமார் இரத்தினசிங்கம் குடும்பம் |
| 4ம் திருவிழா | 20-05-2024 | திங்கள் | பூதவாகனம் | வே.செல்வரட்ணம் குடும்பம், உறவினர்கள் |
| 5ம் திருவிழா | 21-05-2024 | செவ்வாய் | மாம்பழத் திருவிழா | அரியாலையூர் மக்கள் |
| 6ம் திருவிழா | 22-05-2024 | புதன் | மஞ்சம் | சதானந்தன் குடும்பம் |
| 7ம் திருவிழா | 23-05-2024 | வியாழன் | வேட்டை | மதிவதனன் யசோதா குடும்பம் |
| 8ம் திருவிழா | 24-05-2024 | வெள்ளி | சப்பறம் | காரை அன்பர்கள் |
| 9ம் திருவிழா | 25-05-2024 | சனி காலை | தேர்[இரதோற்சவம்] | பொதுஉபயம் |
| | | சனி மாலை | தேரடித் திருவிழா | |
| 10ம் திருவிழா | 26-05-2024 | ஞாயிறு காலை | 1008 சங்காபிஷேகம் | மு.ரஜிவீகரன் R.J Multi pac Inc |
| | | ஞாயிறு மாலை | பூந்தண்டிகை | அலங்கார வீதியுலா |
| | 27-05-2024 | திங்கள் காலை | பிராயச்சித்த அபிஷேகம் | வி.விஜயசேகர் குடும்பம் |
| | 28-05-2024 | செவ்வாய் | பூங்காவனம் | (R.J Multi Litho Staff) |
| | 31-05-2024 | வெள்ளி | வைரவர்மடை | கு.ராஜ்குமார் |

**சப்பறத் திருவிழா**
5.00(மாலை) அபிஷேகம்(ஸ்நபனம்)
7.00(மாலை) மூலமூர்த்தி பூஜை
7.30(மாலை) கலைநிகழ்ச்சி,
வசந்தமண்டப பூஜை இடம்பெற்று விநாயகர் சப்பறத்தில் வீதியுலாவரும் அருங்காட்சியும் இடம்பெறும்.

**தேர்த்திருவிழா**
8.00(காலை) அபிஷேகம்(ஸ்நபனம்)
9.30(காலை) மூலமூர்த்தி பூஜை
10.30(காலை) வசந்தமண்டபபூஜை
11.30(மதியம்) தேர் வீதிவலம்.
தொடர்ந்து பச்சைசாத்தப்பெற்று அவரோகணம் நிகழ்ந்து பஞ்சமுக அர்ச்சனைகள் இடம்பெறும்.

**1008 சங்காபிஷேகம்**
காலை 7.00 மணிக்கு அபிஷேகம் தொடர்ந்து 11.30 மணிக்கு மூலமூர்த்தி, வசந்த மண்டபப் பூஜைகள் நடைபெற்று வீதியுலாவரும் அருங்காட்சியும் இடம்பெறும்.

தேர்த் திருவிழா பொது உபயம். இவ் உபயத்தில் பங்கு கொள்ள விரும்பும் அன்பர்கள் ஆலயத்தில் பதிவு செய்து நீங்களும் உபயகாரர்களாகி, சகல விக்கினங்களையும் தீர்க்கும் விக்ன விநாயகப் பெருமானின் தெய்வீக அருள் பெற்றுய்வீர்களாக!

ஓம் விக்ன விநாயக நம

1808 Drew Road, Mississauga
905 612 1856

Gprinters 905 629 8089,416 875 6096



முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின்
வாழ்வாதாரத்திற்காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை
13வது ஆண்டாக நடாத்தும்



ஊட்டும் கரங்கள்



தமிழும் இசையும்
இராப்போசன விருந்தும்



யூலை 28, 2024
ஞாயிற்றுக்கிழமை - 5:30PM
METROPOLITAN CENTRE
3840 FINCH AVE EAST
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)

இன்பத் தமிழ்ப் பேச்சு
சிறப்புச் சொற்பொழிவாளர், தமிழ் கூறும் நல்லுலகின் தன்னிகரற்ற பேச்சாளர், சொல்லின் செல்வி, மொழி அரசி, , பேராசிரியை
பர்வின் சுல்தானா

Zee தமிழ் சரிகமப புகழ்
கோபாலகிருஷ்ணன்
கனேடிய தமிழ்ப் பாடகர்களுடன் இணைந்து வழங்கும்
இன்னிசை மாலை

என் இனிய வாசகர்களே! கருணையாளர்களே! கடந்த 12 ஆண்டுகளாக நீங்கள் வழங்கி வருகின்ற ஒத்துழைப்புக்கும் வாரி வழங்கும் நன்கொடைகளுக்கும் மனமார்ந்த நன்றிகள். நீங்கள் வழங்குகின்ற ஒவ்வொரு டொலர்களும் அன்பு இல்லத்தில் வாழும் 423 குழந்தைகளுக்கு சிறப்பான முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இவ்வாண்டு கனடிய மண்ணில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பொருட்களின் விலையேற்றம், வேலை வாய்ப்புக் குறைவு, பொருளாதார நலிவுகள் காரணமாக எமது நிகழ்வுக்கும் பெருமளவு பணம் தேவைப்படுகின்றது. நீங்கள் ஒரு தரமான நிகழ்வைக் கண்டு களிப்பது மாத்திரமல்ல உங்கள் பணம் ஓர் தர்ம காரியத்திற்கு - 423 குழந்தைகளின் பசிப்பிணி போக்க உதவுகின்றது என்பதை மறவாதீர்கள்.

அன்பர்களே! நீங்கள் முற்கூட்டியே உங்கள் பெயர், விபரங்களை பதிவு செய்வதன் மூலம் செலவுகளை எம்மால் கட்டுப்படுத்த முடியும் என்பதால் உங்கள் பூரண ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம்.

தொடர்புகளுக்கு- ஈழநாடு பரமேஸ்
416-841-9600 •eelanadu1993@gmail.com



# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**
Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre
309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# மே 18, 2024

மீண்டும் ஒரு நினைவு நாள் தமிழ் மக்களைக் கூட்டிக் கட்டியிருக்கிறது திரட்டியிருக்கிறது. இம்முறையும் ஆயிரக்கணக்கானவர்கள் முள்ளிவாய்க்காலை நோக்கித் திரண்டிருக்கிறார்கள். விசேஷமாக பன்னாட்டு மன்னிப்புச் சபையின் பொதுச் செயலாளர் அங்கே காணப்பட்டார். கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் தமிழ் அதிகாரி ஒருவரும் அங்கே காணப்பட்டார்.

சுமந்திரனும் உட்பட செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், சிறீதரன், கஜேந்திரன் முதலாய் பல நாடாளுமன்ற உறுப்பினர்களும் அங்கே காணப்பட்டார்கள். சுரேஷ் பிரேமச்சந்திரன் போன்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அங்கே காணப்பட்டார்கள். மதகுருக்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், அரசியல் செயற்பாட்டாளர்கள் போன்றவர்களும் அங்கே காணப்பட்டார்கள்.

ஈழத் தமிழர்களை பொருத்தவரை கட்சி பேதமின்றி இயக்க பேதமின்றி வடக்கு கிழக்கு என்ற பேதம் இன்றி,சமய பேதமின்றி, சாதி பேதமின்றி, தமிழ் மக்கள் ஒன்றாகக் கூடும் ஒரே நிகழ்வு மே 18 தான். இந்த முறையும் அந்த நாளின் புனிதம்அந்த நாளின் மகிமை தாயகத்தில் நிலைநாட்டப்பட்டது. அந்த நாளின் மகிமை என்பது எல்லாத் தமிழ் தரப்புகளும் அங்கே திரள்வது தான்.

முள்ளிவாய்க்காலுக்கு வெளியே தமிழ் பகுதிகளெங்கும் பரவலாக நினைவு கூர்தல் நடந்திருக்கின்றது. கொழும்பிலும் நடந்திருக்கிறது. புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் வழமை போல பெருமெடுப்பில் நடந்திருக்கின்றது. எனினும் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவரையும் அவருடைய குடும்பத்தவர்களையும் நினைவு கூர்வதா இல்லையா என்ற விடயத்தில் புலம்பெயர்ந்த தமிழ்ப் பரப்பில் உடைவு தென்படுகின்றது.




கடந்த 15 ஆண்டுகளில் தமிழ் சமூகத்தில் ஏற்பட்ட ஆகப்பிந்திய உடைவு அது. தமிழ் மக்கள் இன்னும் எத்தனை துண்டுகளாக உடையப் போகின்றார்களோ?

தமிழர்கள் எத்தனை துண்டுகளாக உடைந்தாலும் நினைவு நாட்கள் அவர்களை திரட்டிக் கட்டி விடும் என்று அரசாங்கத்திற்கு தெரியும். அதனால் தான் கிழக்கில் மே 18ஐ அனுஷ்டிக்க முற்பட்ட அரசியல்வாதிகள், செயற்பாட்டாளர்கள் மற்றும் சாதாரண மக்களுக்கு எதிராக கடுமையான கெடுபிடிகள் ஏவி விடப்பட்டுள்ளன

ஆனால் வடக்கில் நிலைமை அப்படியல்ல. வடக்கில் மே 18ஐ அனுஷ்டிப்பதற்கு போலீசார் பெரிய அளவில் தடைகள் எதையும் விதிக்கவில்லை. சில இடங்களில் படைவீரர்கள் முள்ளிவாய்க்கால் கஞ்சியை வாங்கி அருந்தியிருக்கிறார்கள். வடக்கில் கஞ்சி காய்ச்சுவதற்குத் தடைகள் இருக்கவில்லை. தமிழர் தாயகப் பகுதியில் ஒப்பீட்டளவில் அதிகரித்த அளவிலும் பரவலாகவும் கஞ்சி காய்ச்சப்பட்டது வடக்கில் தான். பல்கலைக்கழக மாணவர்களும் உட்பட கட்சிகளும் செயற்பாட்டு அமைப்புகளும் சமூக நிறுவனங்களும் தாமாக முன்வந்து. தன்னார்வமாக முள்ளிவாய்க்கால் கஞ்சியைச் சமைத்துப் பரிமாறியிருக்கிறார்கள். ஆனால் கிழக்கில் போலீசார் அதைத் தடுக்க முற்பட்டிருக்கிறார்கள். கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்ட பின்னரும் கூட, கிழக்கில் போலீசார் முள்ளிவாய்க்கால் கஞ்சி சமைப்பதை தடுக்க முனைந்தார்கள். சில இடங்களில் அடுப்பை கால்களால் தட்டி நெருப்பை அணைக்க முற்படுகிறார்கள். கடந்த ஆண்டும் மாவீரர் நாளை முன்னிட்டும் கிழக்கில் கெடுபிடிகள் அதிகமாகக் காணப்பட்டன. இந்த விடயத்தில், அதாவது நினைவுகளை அனுஷ்டிக்கும் விடயத்தில் ஆனால் கிழக்கில் நினைவு கூர்தலைத் தடுக்கும் அதே அரசாங்கம் இன்னொரு புறம், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றைப் பற்றி உரையாடுகின்றது. உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு எனப்படுவது நிலைமாறு



அரசாங்கம் வடக்கை வேறாகவும் கிழக்கை வேறாகவும் கையாள்வதற்குக் காரணம் என்ன?

இரண்டு காரணங்களைக் கூறலாம். முதலாவது காரணம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கிழக்கில் காலூன்ற முற்படுகின்றது. கடந்த ஆண்டு திலீபனின் நினைவு நாளின் போது, அந்தக் கட்சியானது ஒரு வாகன ஊர்தியை திருகோணமலை வழியாக எடுத்துச் சென்ற பொழுது அந்த வாகன அணி தாக்கப்பட்டது. அதன் பின் மாவீரர் நாளை அனுஷ்டிக்க முயன்ற கட்சியின் செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டார்கள். இம்முறையும் மே 18ஐ முன்னிட்டு அக்கட்சியின் செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அல்லது நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அதாவது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது கிழக்கில் பலமடைவதை அரசாங்கம் தடுக்க முயற்சிப்பதை இது காட்டுகிறது. இது ஒரு காரணம்.

இரண்டாவது காரணம் கிழக்கில் ஏற்கனவே பலமடைந்து வரும் பிள்ளையான், வியாழேந்திரன் போன்றவர்களைத் தொடர்ந்தும் பலப்படுத்த அரசாங்கம் முயற்சிக்கின்றது. கிழக்கில் கிழக்கு மைய அரசியலை ஊக்குவிப்பதன் மூலம், வடக்கையும் கிழக்கையும் அதாவது தமிழர் தாயகத்தை உடைக்கலாம்.

அதேசமயம், கிழக்கு மையக் கட்சிகள் பெருமளவுக்கு முஸ்லிம்களுக்கும் எதிரானவை. அங்கே அக்கட்சிகளைப் பலப்படுத்தினால் கிழக்கில் தமிழ் முஸ்லிம் உறவுகளை மேலும் பகை நிலைக்குத் தள்ளலாம். அதன் மூலம் வடக்குக் கிழக்கு இணைப்புக்கு எதிராக முஸ்லிம்களைத் தூண்டி விடலாம்.

அதாவது அரசாங்கத்தின் நோக்கம் மிகத் தெளிவானது. கிழக்கில் கிழக்கு மையக் கட்சிகளைப் பலப்படுத்துவது. அதற்கு நினைவு கூர்தலை அங்கே அனுமதிக்கக் கூடாது. ஏனென்றால் நினைவு நாட்கள் தமிழ் மக்களை ஒன்றாக்கும் சக்தி மிக்கவை .அவை வடக்கையும் கிழக்கையும் அதாவது தமிழர்களின் தாயகத்தை, தாயக ஒருமைப்பாட்டைப் பலப்படுத்தும் சக்தி மிக்கவை. எனவே வடக்கையும் கிழக்கையும் பிரிக்க நினைப்பவர்களைப் பொறுத்தவரை, நினைவு கூர்தலை கிழக்கில் அனுமதிக்கக் கூடாது.அது தான் கடந்த சில ஆண்டுகளாக நடந்து வருகின்றது.

கால நீதியின் கீழ் உருவாக்கப்பட வேண்டிய ஒரு கட்டமைப்பு. நிலை மாறுகால நீதி எனப்படுவது 2015ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட முப்பத்தின் கீழ் ஒன்று ஐநா தீர்மானத்தின் அடிப்படையில் அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு பொறுப்பு. அதன்படி உருவாக்கப்பட வேண்டிய ஒரு கட்டமைப்புத் தான், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஆகும். ஆனால் நிலைமாறு கால நீதியின் கீழ் பாதிக்கப்பட்ட மக்கள் நினைவு கூரும் முழு உரிமையையும் பெற்றிருக்கிறார்கள்.

குறிப்பாக நிலை மாறுகால நீதியின் நான்கு தூண்களில் ஒன்று ஆகிய இழப்பீட்டு நீதி என்ற பகுதிக்குள் அது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இழப்பீட்டு நீதியின் கீழ்,தமிழ் மக்கள் போரில் இன அழிப்பு செய்யப்பட்டவர்களை நினைவு கூரும் உரிமையுடையவர்கள் ஆகும். தனிப்பட்ட முறையில் அல்லது கூட்டாக நினைவுச் சின்னங்களை நிறுவி நினைவு நாட்களை அனுஷ்டிப்பதற்கு தமிழ் மக்களுக்கு உரிமை உண்டு. ஆனால் கிழக்கில் அது மறுக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் நல்லெண்ண முயற்சிகளை, நல்லிணக்க முயற்சிகளை தமிழ் மக்கள் ஏன் நம்புவதில்லை என்பதற்கு கிழக்கில் கடந்த வாரம் போலீசார் நடந்து கொண்ட விதம் ஓர் ஆகப்பிந்திய சான்று ஆகும்.

இதே அரசாங்கம் போரில் கொல்லப்பட்டவர்களை நினைவு கூர்வதற்கு ஒரு பொதுச் சின்னத்தை உருவாக்கும் நோக்கத்தோடு நிபுணர் குழு ஒன்றை உருவாக்கி வைத்திருக்கிறது. அந் நிபுணர் குழு மாவட்டங்கள் தோறும் பயணம் செய்து மக்கள் கருத்துக்களை கேட்டது. தமிழ்ப் பகுதிகளில் அவர்களுக்கு கருத்துக் கூறிய அனேகர், பொது நினைவுச் சின்னத்தை நிராகரித்திருக்கிறார்கள். கொலை செய்தவர்களையும் கொல்லப்பட்டவர்களையும் ஒன்றாக நினைவு கூர முடியாது என்று தமிழ் மக்கள் மேற்படி நிபுணர் குழுவுக்குக் கருத்து கூறியிருக்கிறார்கள்.

அதாவது அரசாங்கம் நினைப்பது போல ஒரு பொது நினைவுச் சின்னத்தை உருவாக்குவது இலகுவானது அல்ல என்பதைத் தமிழ் மக்கள் நிபுணர்களுக்கு அழுத்தமாகத் தெரிவித்திருக்கிறார்கள். அவ்வாறு ஒரு பொது நினைவுச் சின்ன


**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**– நிலாந்தன் –**




த்தை உருவாக்க முற்படும் அரசாங்கம் நினைவை ஒரு உணவின் மூலம் பகிர முற்படும் தமிழர்களைத் தடுக்கின்றது.

ஓர் உணவைப் பார்த்து அதாவது கஞ்சியைப் பார்த்து அரசாங்கம் பயப்படுகிறது என்றால் அதன் பொருள் என்ன? அந்தக் கஞ்சி கடத்தக்கூடிய அல்லது பேணக்கூடிய நினைவுகளைக் கண்டு அரசாங்கம் அஞ்சுகிறது என்று தானே பொருள் ? மக்கள் ஒன்றுகூடுவதன் மூலம் உணவைப் பரிமாறிக் கொள்வதன் மூலம் நோய் பரவும் என்பதாலேயே இந்த உத்தரவை பிறப்பித்துள்ளதாக நீதிமன்ற உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா கேள்வி எழுப்பியுள்ளார். அப்படியென்றால் ஏன் மே தினக் கூட்டங்களை தடை செய்யுமாறு பொலிஸார் நீதிமன்றங்களை கேட்டுக் கொள்ளவில்லை என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். வெசாக் கொண்டாட்டங்கள், தேர்தல் பிரச்சார பேரணிகளையும் தடைசெய்யுமாறு பொலிஸார் நீதிமன்றங்களிடம் வேண்டுகோள் விடுப்பார்களா என கேள்வி எழுப்பியுள்ள அவர், இதன் காரணமாகவே ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைக்கும் முயற்சிகளை ஜெனீவாவில் மற்றுமொரு தீர்மானத்தை தடுப்பதற்கான ஏமாற்று நடவடிக்கை என தமிழ்மக்கள் கருதுகின்றார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

எனினும் இம்முறை நினைவு கூர்தலுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கிழக்கில் தமிழ் மக்களைப் பயமுறுத்தப் போதுமானவைகளாக இல்லை என்பதோடு, முக்கியமாக திருக்கோணமலையில் கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதற்கு முஸ்லிம் சட்டத்தரணிகள் தாமாக முன்வந்து உதவியிருக்கிறார்கள் என்பது இங்கு முக்கியமாகச் சுட்டிக் காட்டப்பட வேண்டியது. அரசாங்கம் நினைப்பது போல கிழக்கில் நிலைமைகளைக் கையாள முடியாது என்பதனை அது காட்டுகின்றதா?


மாதம் இருமுறை வெளியாகும்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
31 மே 2024 வெள்ளிக்கிழமை
அச்சுப் பத்திரிகையாக அனைத்து
வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு 416 841 9600

வாரம் தோறும் eelanadu.ca
மின்னிதழ் மூலம் பார்வையிடலாம்

# அமெரிக்கா அனுப்பும் இன்னொரு ஜீலி

அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடனால் இலங்கைக்கான புதிய தூதுவராக பெயரிடப்பட்டிருந்த எலிசபெத் ஹோஸ்ட் கடந்த 9ஆம் திகதி செனட் வெளிவிவகாரக் குழுவினால் நேர்காணல் செய்யப்பட்டார். இது சம்பிரதாய ரீதியான ஒரு நேர்காணல் தான். அவரது நியமனம் பெரும்பாலும் உறுதி செய்யப்பட்ட ஒன்று. எலிசபெத் ஹோஸ்ட் இனக்கான பிரிவில் முதன்மை பிரதி உதவி செயலாளராக இருந்த அதுல் கெசாப், இவ்வாறு இந்தியாவுக்கான தூதுவராக சிறிது காலம் நியமிக்கப்பட்டார்.

முதன்மைப் பிரதி உதவிச் செயலராக இருக்கின்ற ஒருவர், இந்தியாவுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டது பெரிய ஆச்சரியத்துக்குரிய விடயமல்ல. அவ்வாறான பதவியில் இருந்த எலிசபெத் ஹோஸ்ட், இலங்கைக்கான தூதுவராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்றால், அவருக்கு இங்கு முக்கியமான பணிகள், பொறுப்புகள் ஒப்படைக்கப்படுகின்றன என்றே அர்த்தம்.

இலங்கையில் அடுத்தடுத்து தேர்தல்கள் நடக்கவுள்ள அரசியல் சூழல், பிராந்தியத்தில் அதிகரித்து வரும் சீனாவின் தலையீடுகள், பூகோள அரசியல் போட்டி, போன்றன தீவிரமடைந்துள்ள கட்டத்தில், எலிசபெத் ஹோஸ்ட் இந்த பதவிக்கு பெயரிடப்பட்டிருக்கிறார்.

இவர் ஒரு மூத்த இராஜதந்திரி மாத்திரமல்ல, அமெரிக்காவில் அதிகம் செல்வாக்கு செலுத்தும் சிவில் இராணுவ இணைப்பின் அடையாளமாகவும் இருப்பவர். எனது கணவர் ஜே. பி. கிரேஷ், அமெரிக்க இராணுவத்தில் கேணல் தர அதிகாரியாக இருக்கிறார். தனது குடும்பத்திலேயே, சிவில் இராணுவ ஒத்துழைப்பு இருப்பதாக அவர் செனட் நேர்காணலின் போது குறிப்பிட்டிருக்கிறார்.

தற்போதைய அமெரிக்கத் தூதுவர் ஜீலி சங் பின்பற்றும் அணுகுமுறையிலேயே தானும் பயணம் செய்ய விரும்புவதாக அவர் குறிப்பிட்டு கூறியிருக்கிறார். இதிலிருந்து அமெரிக்கா இன்னொரு ஜீலி சங்கை களம் இறக்குகிறது என்று தெளிவாக தெரிகிறது.

அமெரிக்க தூதுவர் ஜீலி சங் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் கொழும்புக்கு வந்தவர். அவர் வந்த சிறிது காலத்திலேயே கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு எதிரான மக்களின் போராட்டங்கள் மெதுவாக உருவாகத் தொடங்கின. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அவர் பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்ற கணக்கில், பதவியை விட்டு மட்டுமல்ல, நாட்டை விட்டே ஓடினார். அவரைப் பதவியில் இருந்து நீக்குவதில், அமெரிக்க தூதுவர் ஜீலி சங் முக்கிய பங்கு வகித்தார் என்ற குற்றச்சாட்டு சிங்கள தேசியவாதிகளால் இன்றைக்கும் சுமத்தப்பட்டு வருகிறது. இத்தகைய தருணத்தில் ஜீலி சங்கின் வழியை பின்பற்ற போவதாக கூறிக் கொண்டு இன்னொரு மூத்த இராஜதந்திரியான எலிசபெத் ஹோஸ்ட் கொழும்புக்கு வரவுள்ளார்.

அவர் இலங்கையை, இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்காவில் முக்கிய பங்காளியாக அடையாளப்படுத்தியுள்ளதுடன், தனது செயற்பாடுகள் மூன்று முக்கிய தூண்களின் அடிப்படையில், அமைந்திருக்கும் என குறிப்பிட்டிருக்கிறார். எமது பொருளாதார ஒத்துழைப்பை விரிவுபடுத்துதல், எமது பாதுகாப்பு நலன்களை வலுப்படுத்துதல் மற்றும் இலங்கையின் பலதரப்பட்ட மற்றும் துடிப்பான மக்களுடன் எமது உறவுகளை ஆழப்படுத்துதல் இந்த மூன்றும் தான் அவர் குறிப்பிட்ட தூண்கள்.

தனது நியமனம் உறுதிப்படுத்தப்பட்டால், இலங்கையில் உள்ள விளிம்பு நிலை மக்களின் பொறுப்புக் கூறல், உண்மை, நல்லிணக்கம், வெளிப்படைத் தன்மை மற்றும் நீதி ஆகியவற்றை ஆதரிப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் இதனை அவர் இன்னொரு



தூணாக குறிப்பிடவில்லை. எவ்வாறாயினும், இந்த நான்கு விடயங்களையும் வரிசைப்படுத்தினால், பாதுகாப்பு நலன்களை வலுப்படுத்துவதே, அமெரிக்காவின் முதல் இலக்காக இருக்கும். அது தான் உண்மை. கடைசியான இலக்காக, விளிம்புநிலை மக்களின் பொறுப்புக்கூறல், உண்மை, நல்லிணக்கம், வெளிப்படைத்தன்மை மற்றும் நீதி போன்ற விடயங்களே அமைந்திருக்கும்.

இலங்கையுடன் அமெரிக்கா பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்தினாலும், இலங்கை மக்களுடன் உறவுகளை பலப்படுத்த முற்பட்டாலும், அதன் பிரதான இலக்கு அமெரிக்காவின் பாதுகாப்பு நலன்களை உறுதிப்படுத்திக் கொள்வது தான். வெளிப்படையான சுதந்திரமான இந்தோ-பசுபிக் என்ற மூலோபாயமே அமெரிக்காவினதும், அதன் கூட்டு நாடுகளினதும், கொள்கையாக இருக்கிறது. இதற்கு அமெரிக்காவும் அதன் கூட்டு நாடுகளும், பல்வேறு உத்திகளைக் கையாளுகின்றன.

இதனை உறுதி செய்து கொள்வதற்கு, குறிப்பாக சீனாவின் தலையீட்டை தடுப்பதற்கு, இலங்கையைப் பயன்படுத்த முற்படுகிறது அமெரிக்கா. அதற்காக அமெரிக்கா இரண்டு வழிகளைக் கையாளுகிறது. ஒன்று இலங்கைக்கு நேரடியான அழுத்தங்களைக் கொடுத்து, சீனாவுக்கு முட்டுக்கட்டை போடுகிறது. இரண்டு இலங்கைக் கடற்படை, விமானப்படையைப் பலப்படுத்தி, சீனா உள்ளிட்ட வேறு தரப்புகள் தலையிடாமல் தடுக்க முனைகிறது.

புதிய அமெரிக்க தூதுவராக பெயரிடப்பட்டுள்ள எலிசபெத் ஹோஸ்ட், இந்தியப் பெருங்கடலில் சீன ஆராய்ச்சிக் கப்பல்கள் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு தடை விதிக்கப்படுவதை உறுதி செய்ய, இலங்கையுடன் இணைந்து பணியாற்றுவதாக, அமெரிக்க செனட் வெளியுறவுக் குழுவிடம் உறுதியளித்திருக்கிறார். சீன மக்கள் விடுதலை இராணுவத்துடன் தொடர்பு இருப்பதாக நம்பப்படும் சந்தேகத்திற்கிடமான நடத்தையை வெளிப்படுத்தும் கப்பல்களால், ஏற்பட்டுள்ள தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து அமெரிக்க செனட் குழு கேள்விகளை எழுப்பியிருந்தது.

தமது கடற்பரப்பில் ரோந்து செல்வதிலும் இறையாண்மையைப் பாதுகாப்பதிலும் இலங்கையின் திறன்களை மேம்படுத்துவதற்கு இலங்கையுடன் ஒத்துழைப்பதன் முக்கியத்துவத்தை அப்போது எலிசபெத் ஹோஸ்ட் வலியுறுத்தியிருக்கிறார். சீன ஆய்வுக் கப்பல்கள் குறித்து எங்களுக்கு பெரும் கவலைகள் உள்ளன, நாங்கள் அந்தத் தடையைக் கேட்டுள்ளோம். இது இலங்கைக்கு நல்லது என்று நாங்கள் நினைக்கிறோம்.

இலங்கையுடனான ஒத்துழைப்பு எமது பாதுகாப்பு உதவியின் ஒரு முக்கிய பகுதியாகும். இலங்கையர்கள் தங்கள் சொந்த கடற்பரப்பில் ரோந்து சென்று தங்கள் இறையாண்மையை பாதுகாக்கும் திறனும் தொழில்நுட்பமும் இருப்பது முக்கியம். நான் தூதுவராக உறுதி செய்யப்பட்டால், நாங்கள் இணைந்து செயல்படுவோம். அவர்கள்



தங்கள் சொந்த திறன்களை உருவாக்க வேண்டும்.' என்றும் பதிலளித்திருக்கிறார். இலங்கைக்கு அமெரிக்கா கடற்படைக் கப்பல்களை வழங்கி வருவதும் இலங்கையின் மரைன் படைப்பிரிவுக்கு பயிற்சி அளித்து ஆயுதங்களை வழங்கியதும், கூட்டுப் பயிற்சிகளை நடத்துவதும், விமானப் படைக்கு கண்காணிப்பு விமானத்தை வழங்குவதும் இதற்காகத் தான்.

அதேவேளை, அமெரிக்காவின் கூட்டாளி நாடான ஜப்பானும் இந்த மூலோபாயத்துக்கு பங்களிக்கிறது. இலங்கைக்கு சோனார் கருவிகள் பொருத்தப்பட்ட கப்பலை வழங்குவதாக, அண்மையில் கொழும்பு வந்திருந்த ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் உறுதி அளித்திருந்தார். அதுவும் இதன் ஒரு அங்கம் தான். அதேவேளை, சீன ஆய்வுக் கப்பல்கள் இலங்கைக் கடற்பரப்பில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு விதிக்கப்பட்ட தடைக்குப் பின்னாலும் அமெரிக்காவே இருந்துள்ளது. முன்னதாக இந்தியாவே இதன் பின்னணியில் இருந்ததாக கருதப்பட்டது. இந்தியாவும் அதன் பாதுகாப்புக் குறித்து கரிசனை எழுப்பியது. கவலை வெளியிட்டது. சீன ஆய்வுக் கப்பலை தடுத்து நிறுத்துமாறு வலியுறுத்தியது. ஆனால், அமெரிக்காவே அழுத்தம் கொடுத்து, சீன ஆய்வுக் கப்பல்களுக்கு தடைவிதிக்கச் செய்திருக்கிறது என்பதை எலிசபெத் ஹோஸ்ட்டின் சாட்சியம் உறுதிப்படுத்தியிருக்கிறது.

இலங்கை அரசாங்கம் எந்தவொரு நாட்டின் ஆய்வுக் கப்பலுக்கும் அனுமதியை மறுத்திருந்தாலும், ஜேர்மனியின் ஆய்வுக் கப்பல் ஒன்றும், அமெரிக்காவின் ஆய்வுக்கப்பல் ஒன்றும் அண்மைக் காலத்தில் கொழும்பு துறைமுகத்துக்கு வந்து சென்றிருக்கின்றன. அவை இலங்கை கடற்பகுதியில் ஆய்வில் ஈடுபடாத போதும், விநியோகத் தேவைகளை பெற்றுக் கொள்வதற்கு கொழும்பு



கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்

துறைமுகத்துக்குள் அனுமதிக்கப்பட்டன. ஜேர்மனி ஆய்வுக் கப்பல் கொழும்பு துறைமுகத்துக்கு அனுமதிக்கப்பட்ட போது அதனை சீனா எதிர்த்தது. அப்போது ஆய்வுகளை மேற்கொள்வதற்குத் தான் தடை என்றும், எரிபொருள் நிரப்புவதற்கோ, விநியோக தேவைகளுக்கோ தடையில்லை என்று கூறி அரசாங்கம் சமாளித்துக் கொண்டது.

ஆனாலும், இந்த தடையின் உள் நோக்கம் மட்டுமல்ல, அதற்குப் பின்னால் அமெரிக்கா மற்றும் இந்தியா தான் இருக்கின்றன என்பதும் சீனாவுக்குத் தெரியும்.

இத்தகைய நிலையில் புதிய அமெரிக்க தூதுவராக எலிசபெத் ஹோஸ்ட் கொழும்பில் பொறுப்பேற்கும் போது, சீனாவுக்கு எதிராக இலங்கையை திருப்பி விடுகின்ற முயற்சிகள் இன்னும் தீவிரமடைந்தால் அது ஆச்சரியமல்ல.


சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
“இணுவில் திருவூர்”
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# தமிழ் பொது வேட்பாளர் முயற்சி தோல்வி அடையுமா?








ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம் பெற்று வருகின்றன. மக்கள் மனு சிவில் சமூகம் ஆரம்பித்த முயற்சி, பின்னர் தமிழ் சிவில் சமூக அமைப்புகளால் முன்னெடுக்கப்படுகின்றது.

அதே போன்று அரசியல் கட்சிகள் மத்தியில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் பேச்சாளரும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு தொடர்பில் ஆரம்பத்திலிருந்தே பேசி வருகின்றார். பின்னர் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி கொள்கையடிப்படையில் தமிழ்பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிப்பதாக அறிவித்தது.

இலங்கை தமிழரசுக் கட்சி 2 வாரத்தில் அதன் உத்தியோகபூர்வ முடிவை அறிவிப்பதாக தெரிவித்திருக்கின்றது. மக்கள் மனு சிவில் சமூகத்தின் ஏற்பாட்டில், கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற கட்சித் தலைவர்களின் சந்திப்பின் போதே. தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா இந்த விடயத்தை தெரிவித்திருந்தார். ஆனால் தமிழரசுக் கட்சியின் தலைவராக வந்திருக்க வேண்டிய சிவஞானம் சிறிதரன் மற்றும் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்கள் பலர் தமிழ்பொதுவேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரித்து வருகின்றனர்.

அதேவேளை இந்த நிலைப்பாட்டை எதிர்க்கும் ஒரு சிறிய தரப்பும் இருக்கின்றது. அரசியல்வாதிகள் தொடக்கம் சில பத்திரிகையாளர்கள் வரையில் அந்த சிறிய குழுவில் இருக்கின்றனர். ஆனால் எதிர்ப்பவர்கள் முன்வைக்கும் காரணங்கள் தர்க்க ரீதியில் மிகவும் பலவீனமானவை.

அதேவேளை தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை எதிர்ப்பவர்கள் எவருமே இதுவரையில் தங்களின் மாற்று நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. அதேவேளை, தமிழ் பொது வேட்பாளர் தேவையில்லை என்றால், தமிழ் மக்கள் யாரை ஆதரிக்க வேண்டும் என்பதையும் அவர்கள் இதுவரையில் வெளிப்படுத்தவில்லை. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி மட்டுமே, அவர்களின் வழமையான பகிஷ்கரிப்பு கோரிக்கையை முன்வைத்து வருகின்றது.

ஒரு குறிப்பிட்ட மக்கள் பொதுவாகவே வாக்களிப்பதில்லை. அவ்வாறு வாக்களிக்காதவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது, அதனை பகிஷ்கரிப்பாக காண்பிக்கலாமென்று காங்கிரஸ் கருதுகின்றது. அவர்கள் வழமை போல் தங்களை புனிதர்களாக காண்பிப்பதற்காக எவற்றையெல்லாம் கூறுவார்களோ அவற்றையே இப்போதும் உச்சரித்து வருகின்றனர்.

தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை எதிர்க்கும் சிறிய தரப்பினர் முன் வைக்கும் குற்றச்சாட்டுகள் இவைகள் தான். இது மக்களின் முடிவல்லமாறாக சிவில் சமூக அமைப்புகள் என்று தங்களை அழைத்துக் கொள்வோர் சிலரின் முடிவு. இதற்குப் பின்னால் அன்னிய சக்திகள் உண்டு. இது ரணில் விக்கிரமசிங்கவை வெற்றி பெறச் செய்வதற்கான ஒரு திரைமறைவு வேலைத்திட்டம், இப்படியான கதைகளையே சிலர் கூற முற்படுகின்றனார். இவ்வாறான கதைகள் எவையுமே, ஒரு தமிழ் பொது வேட்பாளரின் தேவையை தர்க்க ரீதியில் நிராகரிப்பதற்கான பலமான வாதங்கள் அல்ல. மக்களுடன் கலந்துரையாடி முடிவெடுப்பது என்றால் என்ன? இலட்சக்கணக்கான மக்களுடன் கலந்துரையாடி முடிவெடுப்பதா? ஜனநாயகத்தில் மக்களுடன் கலந்துரையாடுவது என்பது, மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் மக்கள் மத்தியில் இயங்கும் சிவில் சமூக குழுக்கள் ஆகியோருடன் கலந்துரையாடி, ஒரு தீர்மானத்தை எட்டுவதாகும். அவ்வாறான சத்தர்ப்பத்தில் கூட பெரும்பான்மையானவர்கள் என்னும் அடிப்படையிலேயே விடயங்கள் ஆராயப்படும். இது தான் ஜனநாயக நடைமுறை. இந்த நடைமுறையின்படி தான் தமிழ் பொது வேட்பாளர் விடயம் கையாளப்பட்டது. கையாளப்படுகின்றது.

கடந்த பதினைந்து வருடங்களாக சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோரின் தனிநபர் தீர்மானங்களில் தான் அனைத்து அரசியல் தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன. இப்போது மக்கள் பற்றி பேசுவோர் அனைவருமே, அப்போது அவர்களின் முடிவுக்கு விளக்கவுரைகள் எழுதிக் கொண்டிருந்தவர்கள் தான். அடுத்தது இவ்வாறு கேட்பவர்கள் உண்டு.

அதாவது, மக்கள் வாக்களிக்காது விட்டால் என்ன செய்வது? இவ்வாறான கேள்வி சில அரசியல்வாதிகள் மத்தியிலும் உண்டு. அரசியல் தலைமைகள் வைத்திருக்கும் நிலைப்பாட்டை மக்கள் ஏற்றுக் கொள்வார்களா என்னும் சந்தேகம் எழுந்தால், உண்மையில் அது மக்கள் தொடர்பான பிரச்சினையில்லை. மாறாக, அரசியல்வாதிகள் வைத்திருக்கும் நிலைப்பாடுகள் தொடர்பான பிரச்சினையாகும். தாங்கள் வைத்திருக்கும் அரசியல் நிலைப்பாடுகளை மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்றால், பின்னர் எதற்காக அந்த நிலைப்பாடுகளை பாதுகாக்க வேண்டும்?

அடுத்தது, இதற்குப் பின்னால் யாரோ இருப்பதான கதைகள். இவ்வாறான கதைகள் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பிற்கு புதியவையல்ல. இது பற்றி முன்னரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதியிருக்கின்றேன். இது ஒரு அரசியல் நோய். இவ்வாறான நோய்க்கு மருந்திடுவது மிகவும் கடினமானது. இப்படியான அரசியல் தொற்று நோயை பரப்பும் ஒரு கூட்டம் இருந்து கொண்டு தான் இருக்கும். அந்தக் கூட்டம் அல்லது தனிநபர்கள் பல்வேறு தரப்புகளின் முகவர்களாக இருக்கக் கூடும். அவர்கள் நமக்கு அருகில் நண்பர்களாகவும் இருக்கலாம். தமிழ் மக்களின் அரசியலை முன்நோக்கி நகர்த்துவதற்கான, கூட்டு முயற்சிகள் வெளித் தெரியும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் இவ்வாறான நோய் பரப்பும் கூட்டம் களமிறங்குவதுண்டு. அவ்வாறானவர்களே, தமிழ் பொது வேட்பாளர் விடயத்திற்குப் பின்னால் யாரோ இருப்பதான கதைகளை காவித் திரிபவர்களாகவும் இருக்கின்றனர். இவ்வாறானவர்கள் சிவில் சமூக தளங்களிலும் இருக்கலாம். இதனை சாதாரணமாக கடந்து செல்வதுதான் இந்த நோயை எதிர்கொள்வதற்கான ஒரேயொரு மருந்தாகும். செயலில் உறுதியுடன் பயணிக்கும் போது, எதிர்ப்புகள் காணாமல் போய் விடும். தமிழ் பொது வேட்பாளர் முயற்சிக்கான தடைகள் உண்மையில் வெளியில் இல்லை. அது உள்ளுக்குள் தான் இருக்கின்றது.

அதிலும் குறிப்பாக இந்த நிலைப்பாட்டை கொள்கை நிலையில் ஆதரிப்பவர்களின் உறுதியின்மையே இதற்கான பிரதான தடையாகும். அதாவது, தமிழ் பொது வேட்பாளர் விடயத்தை அரசியல் கட்சிகளும் சிவில் சமூகங்களும் ஒன்றிணைந்து முன்னெடுப்பது தொடர்பிலேயே தற்போது உரையாடப்பட்டு வருகின்றது. ஆனால் இந்த உரையாடல் அடுத்த கட்டத்தை நோக்கி நகரவில்லை.

ஐந்து கட்சிகளின் கூட்டணியான ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி, தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை கொள்கை அடிப்படையில் ஏற்றுக் கொண்டாலும் கூட, இலங்கை தமிழரசுக் கட்சியின் அறிவிப்பிற்காக காத்திருக்க வேண்டும் என்னும் கருத்தும் சில கட்சிகளிடம் உண்டு. இதன் காரணமாகவே விடயங்கள் வேகமாக நகரவில்லை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும் தமிழ் மக்கள் பேரவையின் சுயாதீனக் குழு என்னும் பெயரில், தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த முயற்சி ஒப்பீட்டடிப்படையில் மிகவும் பலவீனமான முயற்சி.

தமிழ் மக்கள் பேரவை தன்னிச்சை யாக செயற்பட்டதே அதற்கான பிரதான காரணம். அப்போது தமிழ் மக்கள் பேரவையின் பிரதான செயற்பாட்டாளர்களில் ஒருவராக வலம்புரி பத்திரிகையின் ஆசிரியர் விஜயசுந்தரமும் இருந்தார். தமிழ் மக்கள் பேரவையின் உருவாக்கம் தொடக்கம் அதன் தீர்மானங்கள் எவற்றிலும் (சிலர் கூறுவது போன்ற) மக்கள் பங்குபற்றல் இருந்திருக்கவில்லை. அதன் ஒரேயொரு பலமாக, வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் மட்டுமே இருந்தார். ஆனால் அன்று தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரித்தவர்கள் இன்று எதிர்க்க முற்படுவது தான் ஆச்சரியமானது. தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் முயற்சியில் இலகுவான வெற்றியை பெறலாம். கொள்கை நிலைப்பட்டு ஆதரிக்கும் அனைத்துக் கட்சிகளும் இணைந்து இதனை முன்னெடுத்தால் இது ஒரு எழுச்சியாக மக்களை பற்றிக் கொள்ளும், சிவில் சமூக அமைப்புகளும் இந்த முயற்சியோடு இணைந்து நிற்கும் போது அவ்வாறானதொரு எழுச்சி இலகுவாகும். தமிழரசுக்கட்டு இணைந்தால். அது வரவேற்கத்தக்கது. ஒரு வேளை, கட்சியின் உள் நெருக்கடிகளால் அது முடியாமல் போகுமானால் ஏனைய கட்சிகள் இந்த முயற்சியை முன்னெடுக்கலாம். அவ்வாறான சூழலில் தமிழரகக் கட்சி இந்த முயற்சியை எதிர்க்கப் போவதில்லை. கட்சி ரீதியாக இல்லாவிட்டாலும் கூட, தனி நபர்களாக அவர்கள் அனைவரும் இந்த முயற்சியோடு தங்களை இணைத்துக் கொள்ளவே முயற்சிப்பர். இது மிகவும் சாதகமான சூழலாகும்.


கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



கடந்த 15 வருடகால அரசியல் நகர்வுகளில் தமிழ் கட்சிகளால் ஒன்றுபட்டுச் செயற்பட முடியவில்லை. இந்த முயற்சியில் சிவில் சமூக அமைப்புகள் படுமோசமான தோல்வியை சந்தித்திருக்கின்றன. ஆரம்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒருகட்சியாக பதிவு செய்ய வேண்டும் என்னும் நிலைப்பாட்டில் ஒரு சில தனிநபர்களும் சிவில் சமூக பிரதிநிதிகளும் பலவாறான முயற்சிகளை மேற் கொண்டனர். அது வெற்றி பெறவில்லை. காரணம், சிவில் சமூகங்களின் தலையீடுகளை சம்பந்தன் பொருட்படுத்தவில்லை.

பின்னர், ஒரு மாற்றுத் தலைமையை உருவாக்கும் முயற்சியில் சிலர் ஈடுபட்டனர். அந்த முயற்சியும் தோல்வியிலேயே முடிந்தது. காரணம், சிவில் சமூக அமைப்புகளின் தலையீடுகளை கட்சிகள் பொருட்படுத்தலில்வை. இந்த பின்புலத்தில் நோக்கினால், தமிழ்பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் முயற்சியிலும் சிவில் சமூக அமைப்புகளால் ஒரு கட்டத்திற்கு மேல் கட்சிகளை நிர்ப்பந்திக்க முடியாது. அதற்கான ஆற்றலுடன் சிவில் சமூக அமைப்புகள் இல்லை.

எனவே தமிழ் பொது வேட்பாளர் முயற்சி வெற்றி பெற வேண்டுமாயின், அரசியல் கட்சிகளும் சிவில் சமூக அமைப்புகளும் பரஸ்பர விட்டுக் கொடுப்புகளுடன் ஒன்றிணைந்து செயற்பட்டால் மட்டுமே முயற்சி வெற்றியை எட்டும். இல்லாவிட்டால் இந்த முயற்சியிலும் சிவில் சமூககுழுக்கள் மோசமான தோல்வியையே சந்திக்கும். கட்சிகள் என்னதான் கொள்கையை உயர்த்திப் பிடிப்பதாக கூறிக் கொண்டாலும் கூட, அவர்களுக்கு தேர்தல் நலன்கள் பிரதானமானது.

ஏனெனில் தேர்தலில் தோல்வி யுற்றால் அதன் பின்னர் அவர்களால் மக்கள் மத்தியில் அதிகாரமுள்ளவர்களாக இயங்க முடியாது. எனவே கட்சிகளுக்கு மக்கள் மத்தியில் இடம் இருக்க வேண்டுமாயின், அவர்களுக்கு நேர்தல் வெற்றி கட்டாயமானது. தேர்தல் நலன்களை முற்றிலுமாக புறம்தள்ளி எந்தவொரு கட்சியும் முடிவுகளை எடுக்காது. இந்த பதார்த்தத்தை சிவில் சமூக அமைப்புகள் புரிந்து கொள்ள வேண்டும். வெறுமனே தங்களின் தீர்மானங்களிலிருந்து கட்சிகளை அணுகினால் விடயங்களை

(22ம் பக்கம் பார்க்க)

# புலிகளும் எலிகளும்

ஈழத் தமிழர்களின் விடுதலைக்கான அரசியல் இப்பொழுது வெறுமனே தேர்தலுக்கான அரசியலாகச் சுருங்கி விட்டது. அப்படிச் சுருங்கியதன் விளைவுகளே இப்போது நடக்கும் தடுமாற்றங்களும் குத்துக் கரணங்களுமாகும்.

தேர்தலுக்கான அரசியல் என்பது தனியே தேர்தல் வெற்றியை மட்டுமே குறியாகக் கொண்டதாகத் தமிழ்த் தரப்பினரால் ஆக்கப்பட்டு விட்டது. இதை தமிழ் ஊடகவியலாளர்களும் அரசியற் பத்தியாளர்களும் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் ஆதரித்துச் செயற்படுகிறது. சரியாகச் சொன்னால்இ இந்தத் தரப்புகளும் தேர்தல் அரசியலில் தான் தங்களுடைய அடையாளங்களையும் இருப்பையும் பேணிக் கொள்கின்றன. (இதைப்பற்றி அடுத்த கட்டுரையொன்றில் விரிவாகப் பார்க்கலாம்).

தேர்தல் அரசியலையே தமது வழிமுறையாகவும் வாழ் முறையாகவும் கொண்ட தரப்புகள் இதில் ஈடுபடுவது வேறு. விடுதலைக்கான அரசியலில் ஈடுபட்டஇ இரத்தம் சிந்திய போராட்ட வழிமுறையில் வந்தவர்கள் ஈடுபடுவது வேறு.

முதலாவது தரப்பினர் காலாகாலமாகத் தமிழ் வாக்காளர்களைக் கவரும் தந்திரோபயங்களில் கைதேர்ந்தவர்கள். அதற்கேற்றவாறு அவர்கள் அவ்வப்போது எடுபடக் கூடிய கவர்ச்சிகரமான அறிவிப்புகளைச் செய்வார்கள். பிரகடனங்களை விடுப்பார்கள். பிறகு அந்தப் பிரகடனங்களையும் அறிவிப்புகளையும் தாமே மறந்தும் மீறியும் செயற்படுவார்கள்.



1977 இல் தமிழீழத்தில் தான் அடுத்த தேர்தல் என்று தொடங்கிய வீரப் பிரகடனம் இப்பொழுது சர்வதேச சமூகத்துக்கு தமிழ் மக்களின் அபிலாஷையை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். தமிழ் மக்களின் ஒற்றுமையை வலியுறுத்த வேண்டும் என்பது வரையில் வந்துள்ளது. இதற்காகத் தான் 2024 செப்ரெம்பரில் நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப்பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்று இப்பொழுது சொல்லப்படுகிறது. இதற்குப் பிறகு என்ன சொல்வார்களோ!

இதில் ஒன்றைக் கவனிக்க வேண்டும். 1977 இல் தமிழீழத்தில் தான் அடுத்த தேர்தல் என்றவர்கள் இப்பொழுது எங்கே தேர்தலில் ஈடுபடுகிறார்கள்? என்பதை. இதையிட்டெல்லாம் இவர்கள் வெட்கப்படுவதேயில்லை. இப்போதுள்ள தமிழ்ப் பெருங்குடி மக்களும் இதையெல்லாம் கேள்வி கேட்பதில்லை.

1977இல் அடுத்த தேர்தல் தமிழீழத்தில் தான் என்ற தமிழரசியற் தலைவர்கள் 1981 இல் அதை மறந்து விட்டு மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் போட்டியிடத் துணிந்தனர். இந்த ஏமாற்றை உணர்ந்த அன்றைய இளைஞர்கள் அப்போதைய தமிழரசியற் தலைவர்களை எதிர்த்தனர். அதற்குப் பிறகு நடந்த ஆயுதப்போராட்டத்தில் தமிழரசியற் தலைவர்களின் இடம் இல்லாமற் போனது. அல்லது மங்கலாக இருந்தது.

ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பிறகு எழுச்சியடைந்த மிதவாதத் தமிழரசியற் தலைமை மறுபடியும் தேர்தலுக்கான அரசியலில் மையங் கொண்டது. அதற்காகத் தனது பழைய பாணியிலான மக்களை ஏமாற்றும் அரசியற் பிரகடனங்களையும் அறிவிப்புகளையும் செய்யத் தொடங்கியது. 2010இல் நடந்த ஜனாதிபதித் தேர்தல் பாராளுமன்றத் தேர்தல் போன்றவற்றில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சில பிரகடனங்களையும் அறிவிப்புகளையும் செய்தது.

1.சர்வதேச ரீதியிலான போர்க்குற்ற விசாரணை.

2 காணாமலாக்கப்பட்டோரின் பிரச்சினைக்குத் தீர்வு.

3.அரசியற் கைதிகளை விடுவித்தல்.

4.படையினரால் ஆக்கிரமிக்கப் பட்டிருக்கும் நிலங்களை மீட்டெடுப்பது.

5.இடம்பெயர்ந்த மக்கள் முழுமை யாக மீள்குடியேற்றம் செய்யப்படுதல்.

6. இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு.

7. பொருளாதார ரீதியாக எம்மை நாமே கட்டியெழுப்புதல்

8.நாமொரு தேசமாக எழுதல் இப்படிப் பல.

ஆனால் இவை எதையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பின்வந்த 15 ஆண்டுகளிலும் நிறைவேற்றவில்லை. இவற்றைப் பற்றிப் பாராளுமன்றத்திலும் மாகாணசபை உள்ளூராட்சி சபைகளிலும் பேசியதோடு சரி. மட்டுமல்ல மாகாணசபை பிரதேச சபைகளின் மூலம் செய்யக் கூடிய செயற்படுத்த வேண்டிய பணிகளைக் கூடச் செய்யாமல்இ அங்கெல்லாம் இந்தப் பிரகடனங்களைத் தீர்மானமாக்கி நிறைவேற்றுவதையே தொழிலாகக் கொண்டது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மட்டுமல்ல தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும் தான். போதாக்குறைக்கு சில பிரகடனங்களைப் பற்றிப் பேசுவதற்காக ஜெனீவாவுக்குச் செல்கிறோம் என்று வருடா வருடம் படையெடுத்துப் போகிறார்கள். அப்படியே உலகம் சுற்றுகிறார்கள். அப்படியே தங்களை நன்றாக வளர்த்துக் கொள்கின்றனர்.

ஆனால் போராட்டத்தில் இணைந்து நின்று அளப்பரிய தியாகங்களைச் செய்து பாதிக்கப்பட்ட மக்களின் நிலையோ மிகப் பரிதாபமானதாக இன்னும் அப்படியே தான் இருக்கிறது. அதை மேலுயர்த்திக் கொள்வதற்கோ அல்லது பாதிக்கப்பட்ட பிரதேசங்களைக் கட்டியெழுப்புதற்கோ யாருமே முன்வரவில்லை. எங்கும் எவரும் மக்களோடு நின்ற எத்தகைய களப் பணிகளையும் ஆற்றவில்லை. அதற்கு இன்னும் தயாராகவும் இல்லை.

இதைப் பகிரங்கமாக ஒத்துக் கொண்டிருக்கிறார் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான எம்.ஏ. சுமந்திரன். இது தொடர்பாக அவர் 11.05.2024இல் விடுத்துள்ள அறிக்கையில் விரிவாகச் சொல்லியிருக்கிறார். அதனுடைய சாராம்சம் இது தான். கடந்த 15 வருட காலத்தில் எங்களுடைய அரசியல் சமூக பொருளாதார விடுதலைக்காக நாம் மேற்கொண்ட அணுகுமுறைகள் வெற்றியளித்துள்ளனவா என்ற கேள்வியின் அடிப்படையில் சுய விமர்சனத்தை மேற்கொள்வது அவசியம் எனக் கருதுகிறேன் என்று.

ஆனால் இன்று தமிழ்த்தேசிய அரசியற் பரப்பில் இயங்குகின்ற பத்துக்கு மேற்பட்ட கட்சிகளில் எத்தனை கட்சிகள் இத்தகைய சுய விசாரணைக்குத் தயாராக உள்ளன? அல்லது அவற்றில் இயங்கும் பல நூற்றுக்கணக்கானே அரசியலாளர்களில் எத்தனை பேர் இப்படித் துணிவோடு தம்மைச் சுய விசாரணைக்குட்படுத் தயாராக உள்ளனர்?

அரசியற் கட்சிகள் அரசியல்வாதிகள் மட்டுமல்ல எதிர்ப்பு அரசியலை அல்லது விடுதலை அரசியலுக்கான தமிழ்த்தேசியவாதக் கருத்தியலை வலியுறுத்துகின்ற அரசியற் பத்தியாளர்கள் ஊடகங்கள் அவ்வப் போது அறிக்கைகளை விடுத்துக் கொண்டிருக்கின்ற யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் தமிழ்ச்சிவில் அமைப்புகள் என எந்தத் தரப்புமே தம்மைத் திரும்பிப் பார்க்கத் தயாரில்லாத நிலையிற்தான் உள்ளன.

பதிலாக தொடர்ந்தும் தமது விருப்பங்களையும் கனவுகளையும் மக்களின் மீது சுமத்துவதிலேயே தீவிரமாக உள்ளன. இதற்கெல்லாம் மக்களே பரிசோதனை எலிகள். இது எவ்வளவு அநீதியானது? அப்படியான ஒன்று தான் இப்போது மேற்கொள்ளப்படுகின்ற தமிழ்ப்பொது வேட்பாளர் விடயமும்.

2010க்குப் பிறகு நடந்த மாகாணசபைகளுக்கான தேர்தல் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் பாராளுமன்றத் தேர்தல் ஜனாதிபதித் தேர்தல் என ஒவ்வொரு தேர்தலின் போதும் இதே போன்ற வெற்றுப் பிரகடனங்களுக்கு அலங்காரப் பூச்சுகளைச் செய்து மக்களிடத்திலே உலாவ விடப்படுகிறது. அட குறைந்த பட்சம் தாம் வலியுறுத்துகின்றது தாம் பிரகடனப்படுத்தும் பிரகடனங்களையும் அறிவிப்புகளையும் செயற்படுத்துவதற்காவது பாடுபட வேண்டாமா? அந்தப் பொறுப்புணர்வு கூட இவர்களுக்கில்லை.

உண்மையில் இவர்கள் தாங்கள் எழுதிய ஒவ்வொரு வரிகளையும் ஒவ்வொரு பத்திகளையும் திரும்ப எடுத்துப் படித்துப் பார்க்க வேண்டும். அவ்வாறே ஒவ்வொரு கட்சியும் கடந்த காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளையும் மக்களின் முன்னே வைத்த பிரகடனங்களையும் அறிவிப்புகளையும் அமர்ந்திருந்து வாசித்துப் பார்க்க வேண்டும். அவை ஒவ்வொன்றும் வெறும் வரிகளும் வெறும் வார்த்தைகளும் இல்லை. அவை மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள். சத்திய வார்த்தைகள். ஆகவே வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறுவதும் சத்திய வார்த்தைகளை மீறிச் செல்வதும் மிகப் பெரிய தவறு. துரோகம். அப்படித் தான் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரும் மாணவர்களாகிய தங்களுடைய வரையறை என்ன? பொறுப்பென்ன? செயற்பாட்டுப் பரப்பென்ன? என்பதை அறிவது நல்லது. (இதைக் குறித்தும் அடுத்த கட்டுரையில் விரிவாகப் பார்ப்போம்).

தொகுத்துச் சொன்னால் முதலில் நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுக்கு உண்மையாக இருங்கள். போராடிய மக்களுக்கும் தியாயகங்களைச் செய்த மக்களுக்கும் விசுவாசமாயிருங்கள். அவர்களுக்கு மேலும் மேலும் பாதிப்பை ஏற்படுத்தாதீர்கள். உங்கள் அபிலாஷைகளுக்கு நீங்கள் தான் முதலில் முன்னின்று உழைப்பவர்களாக இருக்க வேண்டும். அந்த உழைப்பே பிறருக்கு வழியைக் காட்டுவதாக இருக்க வேண்டும். அதன் பிறகே மக்கள் உங்களைப் பின்தொடர்வர்.

இதற்கு மக்கள் மத்தியில் களப்பணிகள் அவசியமாகும். அரசியலை நடைமுறைப்படுத்துவது எப்படி என்று கற்றுக் கொள்ள முயற்சிப்பதாகும். நடைமுறைகள் உருவாகும் போதே அரசியல் வெற்றிகளை அடையலாம்.

பதிலாக ஊடக மையங்களில் கூடுவதோ தங்கள் தங்கள் அலுவலங்களில் இருந்து கொண்டு அறிக்கை விடுவதோ நான்கு பேர் சேர்ந்து கொண்டு புதுப்புது அமைப்புகளை உருவாக்குவதோ அப்படி இப்படி என நான்கு ஆறு அமைப்புகள் இணைந்து கொண்டு அறிக்கைகளைத் தயாரிப்பதோ தூதுவரங்களுக்குக் காவடி எடுப்பதோ இல்லை.

தெற்கிலே பொதுஜன பெரமுனவும் ராஜபக்ஸவினரும் இப்படித் தான் தங்களோடு 100க்கு மேற்பட்ட அமைப்புகள் இணைந்திருக்கின்றன என்று அரசியல் செய்ய முற்பட்டார்கள். அந்த அரசியலின் பெறுமதியை உலகம் நன்கறியும். அதை வரலாறு பழித்துரைக்கிறது.

விடுதலைக்கான அரசியல் என்பது வேறு. தேர்தலுக்கான அரசியல் என்பது வேறு. இரண்டையும் இணைத்துச் செய்வதும் செயற்படுத்தும் செல்வதும் வேறு. அது அதுக்கென அடிப்படைகளும் வேறுபாடுகளும் உண்டு. இதற்கான அரசியற் கணிதங்களை நாம் அறிய வேண்டும்.

விடுதலை அரசியலுக்கு நாம் யாராக இருக்கிறோம் என்பது நம்முடைய செயல்களின் மூலமே அடையாளப்படுத்தப்படும். வார்த்தைகளின் மூலமாக அல்ல. இதற்கு அண்மைய செழிப்பான உதாரணம் தமிழ் மக்கள் பேரவையாகும். மிக ஊக்கத்துடன் உற்சாகமாகத் தொடங்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவை மூன்று ஆண்டுகளால் காணாமற்போனவைகளின் பட்டியலில் சேர்ந்து கொண்டது. தமிழ் மக்கள் பேரவையின் தோல்வியை மறைப்பதற்காக அதன் உற்பத்தியாளர்கள் வேறு மார்க்கங்களில் முயற்சிக்கிறார்கள். அதில் ஒன்று தான் பொதுவேட்பாளர் பற்றிய அறிவிப்புமாகும்.

இப்பொழுது நடந்து கொண்டிருப்பது எலிகள் பல சேர்ந்து வளையெடுக்கும் முயற்சிகள்.

ஆம் புலிகளின் காலம் முடிந்தது. இது செயற்படும் எலிகளின் காலமாகியிருக்கிறது. செயற்படுவோரின் காலம் போயொழிந்தது. செயற்படாதோரின் அரங்கு திறந்திருக்கிறது. என்பதால் தான் தாய் மண்ணை விட்டு ஆயிரமாயிரமாய்த் தினமும் வெளியேறிச் செல்கிறார்கள் மண்ணின் மைந்தர்கள்.

இந்தச் சீரில் தான் தேசமாய்த் திரள்வோம் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறோம்

**- கருணாகரன்**

# காலம் கோருவது வெறும் கருத்து உருவாக்கிகளை அல்ல களப்பணியாளர்களையே!

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -





முள்ளிவாய்க்கால் கஞ்சியை வழங்கினார்கள் என்ற குற்றச்சாட்டில் திருகோணமலை மூதூரில் மூன்று பெண்களைப் பொலிஸார் கைது செய்திருக்கின்றனர். கைது செய்யப்பட்ட முறை மிகத் தவறானது. இந்தக் காட்சி பதிவு செய்யப்பட்டு சமூக வலைத்தளங்களிலும் பகிரப்பட்டுள்ளது. நீதிமன்ற விசாரணையின் போதும் இது சமர்ப்பிக்கப்படலாம். (இவர்களை 17 மே 2024 பிணையில் நீதிமன்றம் விடுவித்துள்ளது)

இரவு வேளையில் வீட்டில் அணிந்திருக்கும் ஆடைகளோடு கிரிமினல் குற்றவாளிகளைப் போல குற்றம் சாட்டப்பட்ட பெண்களை ஆண் பொலிஸார் கொற இழுவையாக இழுத்துச் செல்கின்றனர். குற்றம் சாட்டப்பட்டிருந்தாலும் இந்தக் கைதுக்கு முறைப்படியான நீதிமன்ற ஆணை பெறப்படவில்லை என்று கூறப்படுகிறது. பெண் பொலிசார் அங்கே சென்றபோதும் ஆண் பொலிசாரே பெண்களைக் கைகளில் பிடித்து இழுத்துச் செல்கின்றனர்.

இந்த நடவடிக்கையைத் தமிழர்கள் மட்டுமல்ல முஸ்லிம்கள் மலையக மக்கள் சிங்களவர்கள் என நாட்டிலுள்ள அனைவரும் வேறுபாடின்றிக் கண்டிக்க வேண்டும். மட்டுமல்ல மனித உரிமைவாதிகள் ஜனநாயகச் செயற்பாட்டாளர்கள் அனைவரும் இந்த விடயத்தில் கூடிய அக்கறையைக் கொண்டு செயற்படுவது அவசியம். இந்த நாட்டிலே நீதியும் அமைதியும் முன்னேற்றமும் கிட்ட வேண்டும் என்போர் அனைவரும் இதற்கு எதிராகப் போராட வேண்டும்.

ஏனென்றால் பொலிஸ் அராஜகத்தை எந்த நிலையிலும் யாரும் ஏற்றுக் கொள்ளக் கூடாது. பொலிஸ் அராஜகம் வளர்ந்தால் அது தமிழர் சிங்களவர் முஸ்லிம்கள் என்றெல்லாம் பார்க்காது. எல்லோரிலும் தயக்கமின்றிக் கை வைக்கும்.

கஞ்சி கொடுக்கும் அரசியலைப் பற்றி யாருக்கும் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். முள்ளிவாய்க்காலில் இறுதி வரையிலிருந்து உயிர் தப்பி வந்தவர்களில் ஒருவரான லதா கந்தையா இந்த அரசியலைப் பற்றிய தன்னுடைய அனுபவத்தையும் பார்வையையும் சொல்கிறார். முள்ளிவாய்க்கால் இறுதி நாட்களில் தேங்காய்களுமில்லை. தேங்காய்ச் சிரட்டைகளும் இல்லை. இதற்கென தயார்படுத்தப்பட்ட அரசியல்வாதிகளும் சாமிகளும் ஆசாமிகளும் அடக்கம். ஒரு போராட்டத்தின் முடிவு சிரட்டை ஏந்த வைத்ததென்பதை வெளிப்படுத்துவதும் இறந்தவர்களின் அர்ப்பணிப்பை இழிவு படுத்துவதுமான குறியீடு இது என்று.

இதை ஒத்ததாக இன்னொருவரான அன்பழகி சொல்கிறார் நானும் மனம் வருந்தினேன். சிலர் சிரட்டையை அடையாளப்படுத்துவதிலேயே குறியாக இருக்கின்றனர். தலைவர் (பிரபாகரன்) கடைசியாக சிரட்டையேந்த வைத்தார் என நாசூக்காக பரப்பி இறந்தோரை உயிர்த் தியாகங்களை இழிவு நடுத்துகிறார்கள் என.

இறுதிப் போர்க்காலத்தில் அங்கேயிருந்து மீண்டவர்களில் ஒருவராக நானும் சொல்வேன் முள்ளிவாய்க்கால் கஞ்சி பற்றிய என்னுடைய பார்வையும் நிலைப்பாடும் வேறு. கஞ்சி வழங்குவதாலோ கஞ்சி குடிப்பதாலோ உள ஆற்றுப்படுத்தல் நிகழ்கிறது எனவும் நான் கருதவில்லை. அதை ஒரு சிலர் முன்னெடுத்து இன்று பலரும் பின்பற்றுகிறார்கள். ஆகவே அது அந்த நெருக்கடி நாட்களை நினைவு கொள்வதற்கான சமூக நிகழ்வாக உள்ளது. அந்த நெருக்கடி அதன் பின்னணி பற்றிய பல பார்வைகள் உண்டென்பதையும் அறிவேன். ஆனாலும் மக்களின் மீது நிகழ்த்தப்பட்ட நெருக்கடி வன்முறை அழிவு என்பது மறுக்கப்பட முடியாது. ஆகவே அந்த மக்கள் அதை நினைவிற் கொள்ளவே முயற்சிப்பர். அந்தக் கொடிய நினைவுகளைக் கடந்து செல்வதற்கு இலங்கைத் தீவின் ஆட்சி முறையும் தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வும் முன் வைக்கப்படவில்லை. உண்மையான ஆற்றுப்படுத்தலை தீர்வின் மூலம் அரசாங்கம் செய்திருக்க வேண்டும். அதுவரையிலும் கொந்தளிக்கும் மன நிலையுடைய மக்கள் இப்படித் தான் தங்கள் நினைவுகளை மீட்டுக் கொண்டிருப்பர். அதை பிற சக்திகள் வாய்ப்பாகக் கையாண்டு கொண்டேயிருக்கும்.

முள்ளிவாய்க்கால் கஞ்சியை முன்னெடுப்போரோ இதொரு நினைவு கூரல் செயற்பாடு என்கிறார்கள். அதனைத் தடுக்க முடியாது என்பது அவர்களுடைய வாதம். அது ஒரு போராட்ட வழி முறையாகவோ போராட்டத்துக்கான ஒரு அடையாளமாகவே இருக்கலாம். அதை போராட்டத்தை முன்னெடுக்கும் சமூகமே தீர்மானிப்பது. இப்படிப் பல்வேறு பார்வைகள் ஒவ்வொருவருக்கும் இருக்கும். அது வேறு விடயம்.

இதை அரசியல் ரீதியாகவே அரசாங்கம் அணுக வேண்டும். நினைவு கூரலுக்கு எந்தத் தடையும் இல்லை என்றே கடந்த ஆண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துமிருந்தார். அடிப்படையில் இதொரு அரசியற் செயற்பாடு என்றே முன்னெடுக்கப்படுகிறது.

இப்பொழுது காட்சி மாறியுள்ளதா? சரி இது குற்றம் தான் என்றாலும் அதைச் சட்டரீதியாக முறைப்படி தானே அரசாங்கம் அணுக வேண்டும். இப்படி வெறித்தனமாக இல்லையே!

எப்பொழுதும் தனக்கு வெளியே உள்ள எத்தகைய அரசியற் செயற்பாட்டையும் அரசு அரசியற் கண்கொண்டு பார்ப்பதை விட சட்டத்தின் துணை கொண்டு அடக்க முயற்சிப்பதே அதனுடைய இயல்பு. அதிகாரத் தரப்பின் வழமை இது. அதனால் அது அடக்குமுறையைப் பிரயோகிக்கிறது. அதற்குப் பொலிஸையும் படையையும் பயன்படுத்துகிறது.

போராட்டத்தில் ஈடுபடுகின்றவர்கள் கைது செய்யப்படுவதுண்டு. பொலிஸ் நிலையம் நீதிமன்றம் சிறைச்சாலை என பின்னர் அவர்களும் உறவினர்களும் அலைவார்கள். தலைவர்களும் ஆலோசகர்களும் ஊடக முதலாளிகளும் அவற்றை அரசியலாக்கிக் கொள்வர். இது ஒரு வகையில் அயோக்கியத்தனம். பிற நாடுகளில் தலைவர்களும் கருத்துருவாக்கிகளுமே முதலில் களத்தில் நிற்பர். அவர்களே முன்னணிப்படையாகச் செயற்படுவர்.

இங்கோ தலைவர்களும் ஆலோசகர்களும் கருத்துருவாக்கிகளும் பாதுகாப்பு வலயங்களில் (Safty Zoon) சௌகரியமாக இருந்து விடுகிறார்கள். ஒடுக்குமுறை அரசும் அதனுடைய படைக் கட்டமைப்பும் எப்போதும் மக்களுக்கு எதிராகத்தான் செயற்படும். இதொன்றும் புதியதல்ல. இன்னும் உரிமைகளைப் பகிர்ந்து கொள்ளத் தயாரில்லாத அரசும் ஆட்சியும் தான் நடைமுறையில் உள்ளது.

ஆகவே ஒரு போராட்டத்தை அல்லது போராட்ட வடிவமொன்றைத் திட்டமிடும் போது அதை நிச்சயமாக அரசும் அதனுடைய படைக்கட்டமைப்பும் எதிர்க்கும். முறியடிக்க முயற்சிக்கும். ஒடுக்கும். இதெல்லாம் வன்முறையினாலேயே மேற்கொள்ளப்படும் என்ற புரிதலும் முன் எச்சரிக்கையும் நமக்கு வேண்டும்.

இது தான் அரை நூற்றாண்டுக்கும் மேலாக நடந்து வருகிறது என்ற அனுபவமும் அறிவும் நமக்கு உண்டல்லவா!

அப்படி நடக்காமல் இருக்க வேண்டுமானால் அதாவது அரசு இப்படி நடக்க முற்படாமல் இருக்க வேண்டுமானால் இவ்வாறான அடாவடி அத்துமீறல் முறையின்மைகளுக்கு எதிராகப் பல ஆயிரக்கணக்கான மக்களாக நாம் திரண்டு நிர்வாக முடக்கம் பொலிசுக்கு எதிராக போராடுவதாக இருக்க வேண்டும். அதுவே அரசுக்கு நெருக்கடியைக் கொடுக்கும்.

ஆகவே இதை எப்படி எதிர்கொள்வது முறியடிப்பது என்று முன்திட்டமிடல் இருந்திருக்க வேண்டும். அதாவது திட்டம் 1இ திட்டம் 2இ திட்டம் 3 என தொடர் போராட்டத்துக்கான திட்டமிடலாக.

இன்னும் இதை தெளிவாக விளக்க வேண்டுமென்றால் கஞ்சி கொடுக்கும் போது படைகள் எதிர்த்தால் அல்லது தடுத்தால் அல்லது கைது செய்தால் அடுத்த கட்டமாக என்ன செய்வது? அதை ஒரு பெருமெடுப்பிலான மக்கள் எதிர்பாக வளர்த்தெடுப்பது எவ்வாறு? அதில் எல்லோரையும் எப்படிப் பங்கெடுக்க வைப்பது? தாம் அதில் எப்படி இணைந்திருப்பது என்றெல்லாம் தெளிவாகத் திட்டமிட்டிருக்க வேண்டும். அப்படியில்லாமல் தான் பல போராட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன. இதனால் பலிக்கடாக்களாவது மெய்யான உணர்வோடு போராட்டக் களத்தில் குதிக்கின்ற மக்கள் அல்லது மாணவர்களாக இருக்கின்றனர். அவர்களுடைய குடும்பங்களே பெரும் துன்பத்துக்கு ஆளாகின்றன. இவ்வாறு கைது செய்யப்பட்ட பல பல்கலைக்கழக மாணவர்கள் இன்னும் வழக்கு விசாரணைகளுக்காக நீதிமன்றங்களின் படிகளில் ஏறி இறங்கிக் கொண்டிருக்கின்றனர். இதெல்லாம் பின்னர் பலருக்கு தெரியாமல் போய் விடுகிறது.

இதற்குக் காரணம் போராட்டங்களுக்கு ஐடியா கொடுக்கின்ற ஐயாமணிகளுக்கு அதன் தாற்பரியம் தெரியாது. அவர்கள் இராணுவத்தையோ பொலிசையோ சிறைச்சாலையையோ ஏன் போராட்டக் களங்களையோ வாழ்நாளில் கண்டதும் இல்லை. எதிர்கொண்டதும் இல்லை.

அவர்களுடைய நோக்கமெல்லாம் அரசாங்கத்தையும் படைகளையும் சீண்டுவது மட்டும் தான். அதிலே தங்களுக்கான உயிர்ச் சூட்டைத் தக்க வைத்துக் கொள்வது. அவ்வளவுதான்.

கைது செய்யப்பட்டவர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் அல்லோலப் பட்டுக் கொண்டிருக்கும் போது இவர்கள் தங்களுடைய குடும்ப விடயங்களை மிகக் கச்சிதமாகக் கவனித்துக் கொள்வார்கள். பாதுகாப்பான எதிர் காலத்தை நோக்கிச் செயற்பட்டுக் கொண்டிருப்பார்கள். பிள்ளைகளைப் பிரத்தியேக வகுப்புகளுக்குக் கொண்டு செல்வார்கள். வலு சந்தோசமாகப் பிறந்த நாள் கொண்டாட்டங்களைச் செய்வார்கள். தொலைக்காட்சிகளில் தொடர் நாடகங்களைப் பார்ப்பார்கள். வகுப்புகளைத் தொடர்ச்சியாக நடத்துவார்கள். வருமானத்தைப் பெருக்கிக் கொள்வார்கள்....

இதையெல்லாம் செய்து கொண்டே மாலையில் அல்லது முன்னிரவில் அல்லது விடுமுறை தினங்களில் (தங்களுடைய வருமானம் உள்ளிட்ட எந்த நிகழ்ச்சி நிரலும் கெட்டுவிடாமல் பார்த்துக் கொண்டுஇ ஓய்வு நேர) அரசியலைச் செய்வார்கள்.

அந்த அரசியல் கூட மக்களுக்கானதாக இருக்காது. பிறத்தியாரைத் திருப்திப் படுத்துவதற்காகவே இருக்கும். சில தூதரகங்களின் நிகழ்ச்சி நிரல் அதற்கான அனுசரணை நிதியூட்டம் எல்லாவற்றையும் பெற்றுக் கொண்டே இந்த விளையாட்டில் ஈடுபடுகிறார்கள். அதாவது சொந்த மக்களை பிறத்தியாருக்காகப் பலி கொடுக்கிறார்கள்.

இதொன்றும் ஊகநிலைத் தகவல்களில்லை. சேகரிக்கப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் முன்வைக்கப்படுகின்ற வலிமையான கருத்துகள்.

தாங்கள் நேரடியாக எந்தப் போராட்டத்திலும் இறங்காமல் முன்னிற்காமல் பிறரைத் தூண்டி விடுவதன் மூலம் இதெல்லாம் நிகழ்த்தப்படுகிறது. என்பதாலேயே தமிழ்ச்சமூகத்தினால் முன்னெடுக்கப்படும் இத்தகைய நடவடிக்கைகள் வரவரப் பலவீனப்பட்டு தமிழ்த் தேசிய அரசியலே வங்குரோத்தான நிலைக்கு வந்திருக்கிறது.

போராட்டத்துக்கு தூண்டுகின்றவர்கள் ஆலோசனைகளை வழங்குவோர் அவற்றுடன் கூட நிற்க வேண்டும். அதற்கு விழுகின்ற ஒவ்வொரு அடியையும் தாங்கத் தயாராக இருக்க வேண்டும். அப்பொழுது தான் அந்தப் போராட்டங்களும் அந்த அரசியலும் பலமாகுமும்.(22ம்பக்கம் பார்க்க)

# வடக்கு கிழக்கில் நிலவும் பிரச்சனைகள் அதிர்ச்சியளிக்கின்றன!

## மன்னிப்புச்சபையின் செயலாளர் சிவில் சமூகப் பிரதிநிதிகளிடம் தெரிவிப்பு!




வட கிழக்கில் தமிழ்மக்கள் முகங்கொடுத்து வரும் பிரச்சினைகள் தொடர்பில் அம் மாகாணங்களைச் சேர்ந்த பலரிடம் கேட்டறிந்ததாகவும், அவை தனக்குப் பெரிதும் அதிர்ச்சியளிக்கும் வகையில் அமைந்திருந்ததாகவும் சர்வதேச மன்னிப்புச்சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் போது இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான வன்முறைகள் என்பன தொடர்பில் உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பன உறுதிப்படுத்தப்பட வேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை தொடர்ச்சியாக வலியுறுத்திவருவதுடன், சர்வதேச அரங்கில் இலங்கை மீதான அழுத்தங்களையும் பிரயோகித்துவருகின்றது.

அந்தவகையில் மூன்று தசாப்தகால யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு கடந்த சனிக்கிழமையுடன் (18) 15 வருடங்கள் பூர்த்தியடைந்த நிலையில் முதன்முறையாக தெற்காசியப் பிராந்தியத்துக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருக்கும் சர்வதேச மன்னிப்புச்சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட், கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை சென்றடைந்தார்.

இவ்விஜயத்தின் போது முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் கலந்து கொண்ட அவர், பல்வேறு முக்கிய தரப்பினருடன் சந்திப்புக்களையும் நடாத்தியிருந்தார். அதன் ஓரங்கமாக 20 மே 2024 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் சிவில் சமூகப்பிரதிநிதிகளைச் சந்தித்த செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட், அவர்களிடம் நாட்டின் சமகால மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் விரிவாகக் கேட்டறிந்துகொண்டார்.

மூன்று பிரிவாக நடைபெற்ற இச் சந்திப்புக்களில் ஒன்றில் கலந்து கொண்டிருந்த 'அரகலய' போராட்டக்காரர்கள் உள்ளிட்ட செயற்பாட்டாளர்களிடம் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதற்கு நாட்டில் நிலவும் சுதந்திரம் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோர் மீதான ஒடுக்குமுறைகள் என்பன தொடர்பில் அக்னெஸ் கலமார்ட் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த அவர்கள், அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் ஆர்ப்பாட்டங்கள் மீது ஒடுக்குமுறைகள் பிரயோகிக்கப்படுவதாகவும், ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதற்கு முன்னரே அதற்கு எதிராகத் தடையுத்தரவு பெறப்படுவதாகவும், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கான உரிமை மேலும் பல்வேறு வழிகளில் மறுக்கப்படுவதாகவும் சுட்டிக் காட்டினர்.

அதேவேளை இச்செயற்பாட்டாளர்களில் அங்கம் வகித்த தனியொரு தமிழ்பிரதிநிதியான ராஜ்குமார் ரஜீவ் காந்த், நாட்டின் வட, கிழக்கு மாகாணங்களில் மக்கள் முகங்கொடுத்து வரும் பிரச்சினைகள் தொடர்பில் அக்னெஸ் கலமார்ட்டிடம் எடுத்துரைத்தார். குறிப்பாக அரசியல்கைதிகள் விவகாரம், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், இராணுவமயமாக்கல், தொல்பொருள் திணைக்களத்தின் துணையுடன் இடம் பெறும் காணி சுவீகரிப்புக்கள், பௌத்த சிங்கள மயமாக்கல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் அவர் விளக்கமளித்தார்.

அது மாத்திரமன்றி விசேடமாக தமிழர் விவகாரத்தில் சர்வதேச மன்னிப்புச்சபை போன்ற சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் அரசுக்கு வலுவான அழுத்தம் பிரயோகிக்கவேண்டியது அவசியம் எனவும் அவர் செயலாளர் நாயகத்திடம் வலியுறுத்தினார். அவற்றை செவிமடுத்த அக்னெஸ் கலமார்ட், தாம் உரிய அழுத்தத்தை வழங்குவதாக உறுதியளித்தார்.

அத்தோடு வட கிழக்கில் தான் பல்வேறு தரப்பினரை சந்தித்தாகவும், அவர்களிடம் பல விடயங்களைக் கேட்டறிந்து கொண்டதாகவும் தெரிவித்த அக்னெஸ் கலமார்ட், அவை தனக்குப் பெரிதும் அதிர்ச்சியளிக்கும் வகையில் அமைந்திருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயம் பிசுபிசுத்தது!

(4ம் பக்கத் தொடர்ச்சி) பங்காளிக் கட்சிகள் தெரிவித்ததை அடுத்து தமிழ் பொதுவேட்பாளர் விடயத்தில் தீர்மானமின்றி கூட்டம் நிறைவுக்கு வந்துள்ளது. உரும்பிராய் சிவகுமாரன் சிலை அருகில் உள்ள கூட்டுறவு அரங்கில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணித் தலைவர்களுக்கும் சிவில் அமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நடைபெற்றது.

இச்சந்திப்பில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன், என். சிறீகாந்தா, வேந்தன் உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர். சிவல் அமைப்புக்களின் சார்பில் பேராசிரியர் கணேசலிங்கம், ஆய்வாளர்களான யோதிலிங்கம், நிலாந்தன் மற்றும் வேலன் சுவாமிகள் உள்ளிட்டவர்கள் பங்கேற்றிருந்தனர்.

இந்த உரையாடலின் போது, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பில் தீர்க்கமான முடிவினை எடுப்பதை மையப்படுத்தியே உரையாடல்கள் ஆரம்பமாகியிருந்தன.

குறிப்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வழங்கப்பட்ட கால அவகாசத்துக்குள் தீர்க்கமான முடிவினை அறிவிக்காத நிலையில், அக்கட்சியின் முடிவு கிடைக்கும் வரையில் காத்திருக்காது அடுத்த கட்டமாக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

விசேடமாக, சிவில் சமூகத் தரப்பினரிடத்தில் இருந்து பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட வேண்டியது அவசியம் என்ற கருத்து உறுதியாக முன் வைக்கப்பட்டது. அதேபோன்று, சுரேஷ் பிரேமச்சந்திரன் தரப்பிலும் பொதுவேட்பாளர் நிறுத்தப்பட வேண்டிய அவசியம் என்பது உறுதியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற தொனிப்பட கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டன. எனினும் ரெலோ, புளொட் மற்றும் தமிழ்த் தேசியக் கட்சி ஆகிய தரப்புக்கள் சில கரிசனைகளை வெளிப்படுத்தியிருந்தன. குறிப்பாக அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து இந்த விடயத்தில் தீர்மானம் எடுப்பது தான் மிகவும் முக்கியமான விடயம் என்பதை வலியுறுத்தின.

குறிப்பாக இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பங்கேற்பு இல்லாத சூழலில் தமது கட்சிக்குள், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாகவும் இரு வேறு சந்திப்புக்களை நடத்தியதன் பின்னரேயே முடிவினை எடுக்க முடியும் என்றும் குறிப்பிடப்பட்டது.

அத்துடன் இலங்கைத் தமிழரசுக் கட்சியுடனும் பேச்சுக்களை முன்னெடுப்பது பற்றியும் கவனம் செலுத்தப்பட்டது. இவ்வாறான நிலையில் பொதுவேட்பாளர் விடயம் சம்பந்தமாக மீண்டும் கூடிப் பேசுவதென்ற நிலைப்பாட்டுடன் தீர்க்கமான தீர்மானங்களின்றி கூட்டம் நிறைவுக்கு வந்தது.


சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஒரு சிலர் மீதும் மக்கள் மனு குழு மீதும் ஊடக முதலாளிகள் அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் செயற்பாடுகள் குறித்தும் தற்போது கட்சிகளிடத்திலும் பலத்த சந்தேகங்கள் நிலவுவதாகவும் தெரிய வந்துள்ளது.

### தேசியத் தலைவர் பிரபாகரனதும்

(3ம் பக்கத் தொடர்ச்சி) மாவீரர் குடும்பங்களுக்கு போய்ச் சேர வேண்டிய சொத்துக்களைக் கையளிப்பார்களா? அல்லது வழமை போல் தேசியத் தலைவரது அண்ணன் மனோகரனும் அவரது குடும்பத்தினரும் இந்திய இலங்கை உளவுத் துறைக்கு விலை போய் விட்டார், அவர் துரோகி என்று பிரச்சாரம் செய்து சொத்துக்களைப் பாதுகாப்பார்களா என்பதே இன்றுள்ள மில்லியன் டொலர் கேள்வியாகும்.

# தமது தேசத்தை அங்கீகரிக்கத் தயாராகும் நாடுகளை வரவேற்றுள்ள பலஸ்தீனம்

நோர்வே அயர்லாந்து ஸ்பெயின் ஆகிய நாடுகள் பாலஸ்தீன தேசத்தை அடுத்த வாரம் அங்கீகரிக்கவுள்ளதாக அறிவித்துள்ள நிலையில், பாலஸ்தீன தேசம் என்ற ஒன்று இல்லாமல் மத்திய கிழக்கில் அமைதி நிலவப் போவதில்லை என நோர்வேயின் பிரதமர் ஜொனஸ் கர்ஸ்டோர் (Jonas Gahr Store) தெரிவித்துள்ளார்.



அத்துடன் மே 28ஆம் திகதி நோர்வே பாலஸ்தீன தேசத்தை உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இரண்டுதேசம் என்னும் தீர்வே மத்திய கிழக்கில் அமைதிக்கு அவசியமான விடயம் என தெரிவித்துள்ள பல ஐரோப்பிய நாடுகள் பாலஸ்தீன தேசத்தை அங்கீகரிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த நாடுகளின் அறிவிப்பினையடுத்து அந்த நாடுகளிற்கான தமது தூதுவர்களை இஸ்ரேல் உடனடியாக மீள அழைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாலஸ்தீன தேசத்தினை அங்கீகரிப்பதற்காக ஸ்பெயின், நார்வே மற்றும் அயர்லாந்து எடுத்த முடிவுகளை வரவேற்பதாக பாலஸ்தீன வெளியுறவுத்துறை அமைச்சகம் அறிக்கையொன்றினையும் வெளியிட்டுள்ளது.

மேலும் குறித்த நடவடிக்கையின் மூலம், ஸ்பெயின், நோர்வே மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகள் இரு நாடுகளின் தீர்வு மற்றும் பாலஸ்தீன மக்களுக்கு நீண்டகாலமாக நிலுவையில் உள்ள நீதியை வழங்குவதற்கான தங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளதாகவும் பாலஸ்தீன வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. அத்துடன் குறித்த விடயம் இஸ்ரேலிய சட்ட விரோத ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை அடைவதற்கும் அனைத்து சர்வதேச முயற்சிகளுக்கும் சாதகமாகப் பங்களிக்கும் என பாலஸ்தீன வெளியுறவுத் துறை அமைச்சகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை பாலஸ்தீன தேசத்திற்கு தற்போதைக்கு ஆதரவளிக்கும் நோக்கம் எதுவுமில்லை என அவுஸ்திரேலிய அரசாங்கம் தெரிவித்துள்ளது பாலஸ்தீன அதிகாரசபையை சீர்திருத்த வேண்டும் பணயக்கைதிகள் விடுதலை ஆகியவற்றை வலியுறுத்துவதாக அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

நோர்வே அயர்லாந்து ஸ்பெயின் போன்ற நாடுகளை பின்பற்றி அவுஸ்திரேலியா பாலஸ்தீன தேசத்தை அங்கீகரிக்க வேண்டும் என கிறீன்ஸ் கட்சியினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அவுஸ்திரேலிய இரண்டு தேச கொள்கைக்கு நீண்டகாலமாக ஆதரவு அளித்து வந்துள்ளது என தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் பெனிவொங் இந்த செயற்பாடு முன்னர் எப்போதையும் விட அவசியமாக உள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

2009களின் பின்னான ஈழத்தமிழர் அரசியலின் சிதைவுக்குப் பின்னால் சதிக் கோட்பாடுகள் பிரதான காரணியாக விளங்கியது என்பதை கடந்து செல்ல முடியாது. மீளவும் அத்தகைய சதிக் கோட்பாட்டாளர்களின் கைகளில் ஈழத்தமிழரது அரசியல் அகப்பட்டுள்ளது. அரசியல் என்பது காணப்படும் வாய்ப்புகளை கையாள்வது பற்றிய வித்தை என்பார்கள். அத்தகைய அரசியலே ஈழத்தமிழரது சமகாலத் தேவையாகும். ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களுக்கான பொது நாடுகள் எல்லாக் காலத்திலும் தலையீடு செய்வதை கண்டு கொள்ளலாம். அவை முறையே அமெரிக்கா, இந்தியா, சீனா என்பன.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் அமெரிக்கா தெளிவாக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதாகவே தெரிகிறது. அதனை இலங்கைத் தீவிலுள்ள எவரும் கண்டறிய முடியும். இந்தியா பாராளுமன்றத்தின் மூலம் தற்போதைய ஜனாதிபதியை பாடாகும். தமிழ் மக்கள் அணி திரள்வதையும் ஐக்கியமாக இருப்பதையும் சுயநிர்ணயத்திற்கு உரித்துடையவர்கள் என்பதை வெளிப்படுத்துவதையும் ஏற்றுக் கொள்ளாத சதிக்கோட்பாட்டு வாதிகள் கருத்தாகும்.

இரண்டாவது, தமிழ் பொது வேட்பாளர் என்ற கருத்தியலை முன் வைத்தவர்கள் பெருமளவுக்கு சிவில் தரப்பாக இருந்த கருத்துருவாக்கிகள். அவர்களை மக்களாக கருத முடியாது என்ற வாதமும் எண்ணம் கட்டிவளர்க்கப்பட வேண்டும். அது ஒரு சமூக உறவாக பரிணமிக்க வேண்டும். அதற்கான அடிப்படைகளை உருவாக்குவது அஷியமானது. கருத்துருவாக்கிகள் சமூகங்களின் விருப்புகள், அவாக்கள், எண்ணங்கள் மற்றும் அபிப்பிராயங்களையே கருத்துகளாக உரு வாக்குகிறார்கள். அவை மக்களின் நியதிகள். மார்க்சின் பிரபல கூற்று ஒன்றில் வரலாற்றைப் படைப்பவர்கள் மனிதர்களே. ஆனால் அவர்கள் தமது மனங்களின் விருப்புகளின்படி வரலாற்றைப் படைப்பதில்லை என்கிறார். பிரான்சியப் புரட்சிக்கு வோல்டயரும் ரூசோவுமே காரணம் என்பதை உலகம் இன்றும் பேசிக்கொண்டி

# தமிழ்ப் பொது வேட்பாளர் மீதான நிராகரிப்புக்களும் அதன் போலித்தன்மைகளும்

கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
பேராசிரியர்
– K.T.கணேசலிங்கம் –



வேட்பாளர் காலத்தின் தேவையாக மாறியுள்ளது. அதனை நோக்கி தமிழ் மக்கள் கட்டமைக்கப்பட வேண்டும் என்பது தவிர்க்க முடியாததாகும். ஆனால் நடைமுறையில் அத்தகைய பொது வேட்பாளர் தொடர்பில் ஒன்றுக்கு மேற்பட்ட சதிக் கோட்பாடுகள் அரங்கேற்றப்படுகிறது. அத்தகைய சதிக் கோட்பாடுகளுக்குப் பின்னால் உள்ள அரசியலை தேடுவதாகவே இக்கட்டுரை வடிவமைக்கப்படுகிறது.





தமிழ் பொது வேட்பாளர் என்பது தெளிவான கருத்தியலைக் கொண்டது. தேசியமாக தமிழ் மக்களை ஒன்றிணைப்பது, தமிழரின் தாயகம் வடக்கு, கிழக்கு என்பதை மீள உணர்த்துவது, தமிழ் மக்கள் சுயநிர்ணயத்திற்கும் இறைமைக்கும் உரித்துடையவர்கள் என்பதை வெளிப்படுத்துவது போன்றவற்றின் அடிப்படையில் ஜனாதிபதித் தேர்தலை கையாள்வது.

அதற்காக ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி தமிழ் மக்கள் அவருக்காகவன்றி அவரது கொள்கைக்காக வாக்களிப்பது என்ற தீர்மானம் சிவில் அமைப்புகளாலும் ஈழத்தமிழரின் அரசியல் கட்சிகளாலும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இது 2009 களுக்குப் பின்னர் தமிழரது அரசியல் இருப்பை உறுதிசெய் வதற்கான முயற்சியாக உள்ளது. இது தமிழ் மக்களது பாரம்பரியமான வாழ்விடமான வடக்கு, கிழக்கு மூலோபாய முக்கியத்துவம் கொண்டதென்பதை பிராந்திய சக்திகளுக்கும் உலகளாவிய சக்திகளுக்கும் வெளிப்படுத்துவதோடு, தமிழ் மக்களது அரசியல் அபிலாஷை தீர்க்கப்படவில்லை என்பதையும் உணர்த்துவதாக அமையவுள்ளது.

இது நீண்ட அரசியல் போராட்டத்தையும் ஆயுதப் போராட்டத்தையும் கொண்ட ஈழத்தமிழரது அரசியல் கோரிக்கை தீர்வற்றிருப்பதற்கு எத்தகைய நடவடிக்கையையும் தென்னிலங்கை ஆட்சியாளர்கள் முன்னெடுக்கவில்லை என்பதை தெரிவிப்பதில் தமிழரிடம் கூட்டுத்தன்மை உண்டு என்பதை உணர்த்தவும் காலாக அமையும். இத்தகைய தனித்துவமான ஈழத்தமிழரது அரசியல் இருப்பைப் பற்றிய கோட்பாட்டு புரிதலைக் கொண்டுள்ள தமிழ்பொது வேட்பாளர் பற்றிய விடயத்தை ஏன் சதிக் கோட்பாடுகள் மூலம் குழப்பத்திற்கு உள்ளாக்க முயல்கிறார்கள். இதனை விரிவாக தேடுதல் அவசியமானது.

முதலாவது, பிரதானமாக முன் வைக்கப்படும் சதிக் கோட்பாடாக தமிழ் பொது வேட்பாளருக்குப் பின்னால் நாடுகள் உண்டு என்பதாகும். அத்தகைய நாடுகளை பட்டியலிட சதிக் கோட்பாட்டாளர்கள் தயாரில்லை. காரணம் அவர்களுக்கே அத்தகைய நாடுகள் எவை என்பதை பட்டியல்படுத்த முடியாது. இலங்கைத் தீவின் அரசியலில் 3 பிரதான

தெரிவு செய்த வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை கையாண்ட வித்தை வைத்துப் பார்க்கும் போது சஜித் பிரேமதாசவை ஆதரிக்க அதிக வாய்ப்புள்ளதாகவே தெரிகிறது. அதனைத் தாண்டி இஸ்ரேல் – ஹமாஸ் போரின் பின்னான உலகளாவிய ஒழுங்கில் இந்தியா அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், இஸ்ரேல் பக்கம் இருப்பதாகக் கருதினால் அமெரிக்காவுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டும். சீனாவைப் பொறுத்த வரை மொட்டுக் கட்சியுடன் தற்போதும் சேர்ந்து பயணிப்பதனால் மொட்டு அடையாளப்படுத்தும் வேட்பாளருக்கு ஆதரவை தெரிவிக்க வேண்டும். அப்படியாயின் ஊடகங்கள் குறிப்பிடுவதன் படி பார்த்தால், சீனா விரும்பியோ விரும்பாமலோ ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டும். இதில் மூன்றாவது வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க. அவரது வாக்கு வங்கி மிகப் பலவீனமானது. அவரை மேற்குறித்த 3 நாடுகளும் கையாள்வதாகவே தெரிகிறது. அதற்காக அவை ஆதரிக்கின்றன என்று பொருள்கொள்ள முடியாது.

இந்த சந்தர்ப்பத்தில் மேற்குறித்த 3 நாடுகளும் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கப் போவதில்லை. காரணம் தமிழ் பொது வேட்பாளர் இலங்கைத்தீவின் ஜனாதிபதி கிடையாது. ஜனாதிபதியாக வரப்போவரும் கிடையாது. அது மட்டுமல்ல அத்தகைய பின்னணியில் ஒரு நாடு ஈழத்தமிழருக்கு ஆதரவாக செயல்பட்டால் மேற்படி தமிழ் பொது வேட்பாளரது கோட்பாட்டு நியதிகளை ஏற்றுக் கொள்வதாக அமையும்.

அத்தகைய தமிழ் மக்களது கோட்பாட்டு ரீதியான நியதியை மேற்குறித்த எந்த நாடு ஆதரிக்கும் என்ற கேள்வி நியாயமானது. இத்தகைய புரிதல்கூட குற்றச்சாட்டை முன்வைப்பவர்களுக்குத் தெரியவில்லை. அதனைக் கடந்து தென்னிலங்கை வேட்பாளர் ஒருவருக்கு தமிழ் மக்களது வாக்குகள் அளிக்கப்பட வேண்டும் என்று கருதும் நாடு தமிழ் பொது வேட்பாளரை ஒருபோதும் ஆதரிக்காது. ஆதரிக்கவும் முடியாது. காரணம் பிரதான 3 வேட்பாளரும் தமிழ் மக்களது வாக்குகளை பெற வேண்டும் எனக் கருதுபவர்கள். தமிழ் மக்களது வாக்குகள் அவர்களது வெற்றியை உறுதிப்படுத்தும். அதனை நோக்கியே நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் வடக்குக்கு அண்மையில் (30.04.2024) விஜயம் செய்திருந்தார்.

அதற்கமைவாகவே வேட்பாளர்களும் பல முனைப்புகளில் வடக்கு, கிழக்கு மக்களுடன் உறவிலுள்ளவர்கள். அப்படியாயின் எந்த நாடும் தமிழ் பொது வேட்பாளருக்குப் பின்னால் இல்லை என்பது தெளிவாகிறது. இதுவே சதிக் கோட்

சிவில் தரப்பென்பது தனி நபர்களை சார்ந்ததென்ற குற்றச் சாட்டும் முன் வைக்கப்படுகிறது. இதற்கான புரிதலை பெறுவதற்காக இத்தாலிய சிந்தனையாளரான அன்ரனியோ கிராம்சின் சிவில் சமூகம் பற்றிய தேடலை கோடிட்டுக் காட்டுவது அவசியம். கிராம்சியின் பார்வையில் சமூக உறவுகள் எனும் மேல் கட்டுமானத்தின் பகுதியே சிவில் சமூகம். சமூக உறவுகளை மூவகையாகப் பிரித்து நோக்கலாம்.

ஒன்று, உற்பத்தியோடு இணைந்த முதலாளி – தொழிலாளி உறவு. இரண்டு, ஒடுக்கு முறை உறவு. அரசும் அரச இயந்திரமும். மூன்று, தனியார் வகை உறவுகள். மதம், தொழிற்சங்கம், அரசியல் கட்சிகள் மற்றும் கலாசார நிறுவனங்கள். இம்மூன்று வகை உறவுகளின் தொகுப்பே சிவில் சமூகம். சிவில் சமூகம் வர்க்கங்களின் கருத்து நிலைப் போராட்டத்தின் களம். அது மட்டுமன்றி வெகுஜன ஜனநாயகப் (Popular Democratic) போராட்டத்தின் களமும் என கிராம்சி விவாதிக்கின்றார். இனம், சாதி, பால்,மொழி, தேசிய இனம் ஆகிய பிரிவுகளின் அடிப்படையில் எழும் முரண்பாடுகளும் போராட்டங்களும் சிவில் சமூகத்தின் வெளிப்பாடாகும். (பார்க்கவும்: சமூக சிந்தனைகள் விரிபடு எல்லைகள் : பங்45—46) நவீன் மாக்கிய உரையாடலின் ஆரம்பகர்த்தாவான கிராம்சியின் கருத்துகளை மையப்படுத்தியே சிவில் சமூகம் பற்றிய உரையாடல் அதிகம் முன்னெடுக்கப்படுகிறது.


ஈழத்தமிழர் மத்தியில் சிவில் சமூகம் என்ற

ருக்கிறது. ரஷ்யப் புரட்சிக்குப் பின்னால் லெனின் என்ற ஒற்றை மனிதன் சிந்தனை பாலும் போராட்டத்தினாலும் ரஷ்ய மக்களை ஒன்றிணைத்த வரலாற்றை புரிந்து கொள்ளுதல் வேண்டும். உலக வரலாறு முழுவதும் சிந்தனையாலும் கருத்தியலாலும் கட்டமைக்கப்படுகிறது. ஈழத்தமிழரிடம் அத்தகைய விரிபடு சிந்தனை அவசியமானது. அதனை நோக்கிய செல்நெறியே அவசியமானது. சதிக்கோட்பாடுகளல்ல. எனவே தமிழ் மக்களது பொது வேட்பாளரது தேவை காலத்தின தேவையாக உள்ளது.


இது கருத்தியலாக புரிந்து கொள்ளப்பட வேண்டியது. போலித்தனமான, ஆதாரமற்ற எண்ணங்களால் கட்டமைக்கப்படுவதல்ல கருத்தியல். தனிமனித விருப்புகளை விட்டு யதார்த்தமான இருப்பினை நோக்கி ஈழத்தமிழர் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். போலித்தனமான விவாதங்களும் கற்பனையிலான கருத்துகளும் மாற்றத்தை ஏற்படுத்தாது. தமிழ் பொது வேட்பாளர் என்பது அறிவியல் பூர்வமாக ஈழத்தமிழரை ஐக்கியப்படுத்தவும் அபிலாசைகளை வெளிப்படுத்தவும் அரசியல் தீர்வை நோக்கியும் வழிப்படுத்தக் கூடியது. அதனை நோக்கி ஈழத் தமிழரை ஒன்றிணைப்பது அவசியமானது. இது இலங்கையின் அரசியலமைப்புக்குள்ளால் தமிழ் மக்களுக்கு கிடைத்துள்ள அரசியல் வாய்ப்பாகும்.




# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! எந்த ஒரு காரியத்தையும் சிறப்பாக செய்து முடிப்பீர்கள். அடுத்தவர்களிடம் பொறுப்புக்களை ஒப்படைக்காமல் நேரடியாக செய்வது நன்மை தரும். தொழில் வியாபாரம் தொடர்பாக அதிகம் உழைக்க வேண்டி இருக்கும். நிலுவையில் உள்ள பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் நிர்வாக திறமை பளிச்சிடும். எதிர்ப்புகள் குறையும். காரியதடை அகலும். இயந்திரங்கள் தீ ஆகிய வற்றில் கவனம் தேவை.





ரிஷபராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். அடுத்தவருக்கு உதவிகள் செய்யும் போது ஆலோசித்து செய்வது நல்லது.தொழில் வியாபாரத்தில் இருந்த மந்தநிலை மாறி வேகம் பிடிக்கும். வியாபாரம் தொடர்பான முயற்சிகளில் சாதகமான பலன் உண்டாகும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு பொருளாதார நிலை உயரும். பணி உயர்வு சம்பந்தமான தேர்வுகளில் தேர்ச்சி பெறுவீர்கள்.





மிதுனராசி அன்பர்களே! பெரியோர்களின் ஆதரவு கிடைக்கும். மற்றவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் சமூகத்தில் அந்தஸ்தும், மரியாதையும் கிடைக்க பெறுவீர்கள். தூர தேச பிரயாணங்களுக்கான சூழ்நிலை ஏற்படும். சுப நிகழ்ச்சிகள் தங்கு தடையின்றி நடைபெறும். வழக்குகள் உங்களுக்கு சாதகமான நிலையில் இருக்கும். வியாபாரம் லாபகரமாக நடக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களின் செயல்திறமை அதிகரிக்கும்.





கடகராசி அன்பர்களே! செல்வ சேர்க்கை உண்டாகும். சுணங்கி கிடந்த காரியங்களில் வேகம் உண்டாகும். ஆன்மிக பயணங்கள் செல்ல நேரலாம் எதிலும் அளவுக்கு மீறாமல் இருப்பது நல்லது. ஆடம்பர பொருட்கள் சேரும். தொழில் வியாபாரத்தில் இருந்த மெத்தன போக்கு நீங்கும். வெளியூர் செல்ல நேரலாம். உத்யோகத்தில் இருப்பவர்கள் புதிய பொறுப்புகள் கிடைக்க பெறுவர். குடும்பத்தில் திருப்தியான நிலை காணப்படும்.





சிம்மராசி அன்பர்களே! மனதில் நிம்மதி உண்டாகும். உதவி என்று வருபவர்களுக்கு தயங்காமல் உதவிகளை செய்வீர்கள். ஆடைஆபரணம் வாங்குவீர்கள். தொழில் வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் நிதானத்தை கடை பிடிப்பது நல்லது. நீண்ட நாட்களாக எதிர்பார்த்த பதவி உயர்வு இடமாற்றம் கிடைக்கும். தந்தை வழியில் கருத்து பலன் தரும்.




கன்னிராசி அன்பர்களே! அறிவுத்திறன் அதிகரிக்கும். அடுத்தவர் பிரச்னைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. மனதை கட்டுப்படுத்தி கொள்வது நல்லது. சின்ன விஷயங்களில் மன நிறைவு உண்டாகும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். வாக்கு வன்மையால் லாபம் கிடைக்க பெறுவீர்கள். புதிய ஆர்டர் தொடர்பாக பயணங்கள் செல்ல நேரலாம். நிதானத்தை கடைபிடிப்பது நல்லது.





துலாம் ராசி அன்பர்களே! எல்லா காரியங்களும் சுமூகமாக நடந்து முடியும். மனத்துணிவு உண்டாகும். எதையும் வேகமாக செய்து முடிப்பீர்கள். தடை தாமதம் விலகும். மற்றவர்கள் விஷயத்தில் கவனம் செலுத்துவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் எதையும் சாதிக்கும் திறமை உண்டாகும். சரக்குகளை கையாளும் போது கவனம் தேவை. உத்யோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை காணப்படும்.





விருச்சிகராசி அன்பர்களே! எல்லா முயற்சிகளிலும் வெற்றி உண்டாகும். புதிய நபர்களின் அறிமுகமும் அவர்களால் நன்மையும் ஏற்படும். சுபச்செலவுகள் இருக்கும். பணவரத்து திருப்தி தரும். தொழில், வியாபாரம் பற்றிய கவலை ஏற்பட்டு நீங்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கடினமான பணிகளை செய்ய வேண்டி இருக்கும். உங்களது பேச்சு திறமையால் மேலிடத்தில் இருப்பவர்களிடம் நல்ல பெயர் பெறுவீர்கள்.







தனுசுராசி அன்பர்களே! மனதில் இருந்த கவலை நீங்கி தைரியம் உண்டாகும். வாக்கு வன்மையால் எந்த காரியத்தையும் சுலபமாக செய்து முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட கூடுதல் லாபம் கிடைக்க பெற்று, புதிய ஆர்டர்கள் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வேலைபளு குறைந்து மகிழ்ச்சியுடன் காணப்படுவர். அலுவலகத்தில் இருந்த பிரச்னைகள் அகலும். குடும்பத்தில் மகிழ்ச்சி காணப்படும்.




மகரராசி அன்பர்களே! சுப காரியங்கள் திட்டமிட்டபடி நடக்கும். வாகனங்களை பயன்படுத்தும் போது கவனம் தேவை. நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். மனதில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் ஆக்கபூ ர்வமான செயல்களை மேற்கொண்டு வியாபாரத்தில் முன்னேற்றம் காண்பர். தொழில் தொடர்பான பயணங்கள் செல்ல நேரிடலாம். பணிகளை வெற்றிகரமாக செய்து முடிப்பர்.




கும்பராசி அன்பர்களே! தேவையற்ற பிரச்னைகளில் தலையிடாமல் இருப்பது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான போட்டிகள் நீங்கும். மனதில் உற்சாகம் உண்டாகும். பொருளாதார உயர்வு உண்டாகும். உத்யோகஸ்தர்களுக்கு சக ஊழியர்களின் உதவி கிடைக்கும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். குடும்பத்தில் இருந்த சண்டை சச்சரவுகள் நீங்கும். மனநிம்மதி உண்டாகும்.




மீனராசி அன்பர்களே! காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். புதிய தொடர்புகள் மூலம் மகிழ்ச்சி உண்டாகும். முக்கிய நபர்களின் அறிமுகமும் நட்பும் கிடைக்க பெறுவீர்கள். எதிர்பார்த்தபடி எல்லாம் நடந்தாலும் மற்றவர்கள் தவறாக புரிந்து கொள்ள நேரலாம். தொழில் வியாபாரத்தில் வேகம்அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திடீர் பயணத்தை சந்திக்க நேரலாம். பொறுப்புக்களை அதிகரிக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## காலம் கோருவது வெறும் கருத்து உருவாக்கிகளை

(19ம் பக்கத் தொடர்ச்சி) திருகோணமலையில் நடைபெற்ற கைதுகளுக்கு அறிக்கை விடுவது ஆவேசமாகப் பேசுவதற்கு அப்பால் இந்தப் பெண்களை விடுவிக்கச் சட்டரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களை மீட்டெடுக்க வேண்டும். அப்படி எடுப்பதோடு பொலிசின் அராஜகத்துக்கு எதிராக முற்றுகைப் போராட்டத்தை நடத்த வேண்டும்.

இந்தக் கைதுக் காணொலியையே இந்த நாட்டில் உள்ள அனைவருக்கும் (சிங்களர் முஸ்லிம்கள் தமிழர்கள் மலையக மக்கள்) பகிர்ந்து ஜனநாயக உரிமைக்கு எதிரான ஒரு அரச வன்முறை என்பதை உணர வைக்க முடியும். அத்துடன் நாடு முழுவதிலும் உள்ள ஜனநாயகச் சக்திகள் மனித உரிமை ஆர்வலர்கள் அவ்வாறான அமைப்புகளுக்கு பகிர்ந்து அவர்களுடன் இது தொடர்பாக உரையாடி ஒரு தூண்டலையும் அழுத்தத்தையும் கொடுக்கலாம்.

பல்லாயிரக்கணக்கான மக்களாகத் திரண்டு பொலிஸ் நிலையங்கள் அரச பணிமனைகள் போன்றவற்றை அமைதி வழியில் முற்றுகையிட்டிருக்கலாம். தொடர் மக்கள் போராட்டமாக அதை விரித்திருக்க முடியும்.

இதற்கு திட்டமிடலும் கடுமையான உழைப்பும் களத்தில் நிற்கக் கூடிய அர்ப்பணிப்பு உணர்வும் தேவை. அதற்கு யார் தயார்?

கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பல போராட்டங்களும்(?) இப்படித் தான் தொடங்கப்பட்டது. இப்படித் தான் சூம்பிப் போனது. நாளை சூம்பிப் போ போராட்டங்களாகவும் சூம்பிப் போன தமிழ்த் தேசியமாகவும் தான் எல்லாம் இருக்கும்.

## தமிழ் பொது வேட்பாளர் முயற்சி தோல்வி..

(17ம் பக்கத் தொடர்ச்சி) முன்நோக்கி கொண்டுசெல்ல முடியாது. இந்த முயற்சி தோல்வியுற்றால் என்ன நடக்கும்? இந்த ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர், ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான அரிய வாய்ப்பு கிடைக்குமா என்பது சந்தேகமே. இந்தக் கட்டுரையாளரை பொறுத்தவரையில் அதற்கான வாய்ப்பு இனியில்லை. எனவே இந்த முயற்சியை எவ்வாறான விட்டுக் கொடுப்புகளுடனும் ஒப்பேற்ற வேண்டும்.

இலங்கை தமிழரசுக்கட்சி தீர்க்கமான முடிவொன்றை எடுக்க முடியாமல் இருக்கலாம். அது கூட, இந்த முயற்சிக்கு சாதகமானது தான். ஆனால் இவ்வாறானதொரு சூழலில் கூட அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த முடியாமல் போகுமானால், தமிழ் மக்களால் ஒற்றுமையாக எந்தவொரு விடயத்தையும் முன்னெடுக்க முடியாது என்பது நிரூபணமாகும். அதே வேளை, சிவில் சமூகங்கள் என்னும் நிலையில் எந்தவொரு அரசியல் விடயங்கள் தொடர்பிலும் பேச முடியாமலும் போகும்.

## இந்தியா வந்த பிரபாகரனிடம்

(9ம் பக்கத் தொடர்ச்சி) ஒரு திருப்பு முனையாக அமைந்தது. இதற்கிடையில், ஏகப்பட்ட ஆயுதங்கள், வெடி பொருட்களுடன் விடுதலைப் புலிகளின் தலைவர் புலேந்திரன், 16 புலிகள் இயக்கத்தினருடன் பாக் நீரிணை பகுதியில் கைது செய்யப்பட்டார். அவர்களைப் பார்க்கவும் உணவு அளிக்கவும் புலிகள் அனுமதிக்கப்பட்டனர். உணவு அளிக்கும் சாக்கில் அவர்களுக்கு சயனைடு அளிக்கப் பட்டது. அதனை அருந்தி 17 பேரும் உயிரிழந்தனர்,' என்று இந்நூலில் கூறப் பட்டுள்ளது. அவர்களது சடலங்கள் பிரபாகரனின் சொந்த ஊரான வல்வெட்டித் துறைக்கு கொண்டுவரப்பட்டபோது பொது மக்களின் கோபம் உச்சகட்டத்தை எட்டியது. புலிகள் தாக்குதல் நடத்த ஆரம்பித்தனர். மோதலைத் தவிர்ப்பதற்காக பிரபாகரனைச் சந்திக்க இந்திய தளபதிகள் முயன்றனர். ஆனால், அது நடக்கவில்லை. விரைவிலேயே இந்திய ரோந்து வாகனத்தைத் தாக்கிய புலிகள், ஐந்து கமாண்டோக்களை கொன்றனர். இரு தரப்புக்கும் இடையில் மோதல் துவங்கியது,' என்கிறது இப்புத்தகம்.

### இந்தியப் படையின் திட்டத்தை அறிந்து கொண்ட புலிகள்

இந்தப் பிரச்னை எப்படி வலுத்தது என்பதையும் இந்தப் புத்தகம் விவரிக்கிறது. அக்டோபர் 5-ஆம் தேதி யாழ்ப்பாணத்தை வந்தடைந்த ஜெனரல் சுந்தர்ஜி, புலிகளின் ஆயுதங்களைப் பறிக்க 'ஆபரேஷன் பவன்' நடவடிக்கையை துவங்க உத்தரவிட்டார். இந்திய இராணுவம் மூன்று, நான்கு வாரங்களில் இதனை முடித்து விடும் என்றார் சுந்தர்ஜி. இது மோசமான கணிப்பாக முடிந்தது. காரணம், இந்திய இராணுவத்தின் திட்டங்கள் முன்பே பிரபாகரனுக்குத் தெரிந்திருந்தன. காரணம், நிலைமை சுமுகமாக இருந்தபோது தனது தகவல் தொடர்பு அலைவரிசையை புலிகளுடன் இந்திய இராணுவம் பகிர்ந்து கொண்டிருந்தது தான்,' என்கிறது.

ஒரு முறை ஹெலிகாப்டரில் வந்திறங்கி, புலிகளின் தலைவர்கள் அனைவரையும் பிடிக்க இந்தியப் படை திட்டமிட்டது. ஆனால், அதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பாகவே அனைவரும் அங்கிருந்து தப்பியிருந்தனர். ஆரம்பத்தில் புலிகளை 72 மணி நேரத்திலிருந்து 15 நாட்களுக்குள் சுற்றி வளைத்து விடலாம் என இந்திய ராணுவம் நினைத்தது. ஆனால், ஒருபோதும் அது நடக்கவில்லை,' என்கிறது இந்நூல். அந்தத் தருணத்தில் இலங்கைக்கான இந்தியத் தூதராக இருந்த ஜே.என்.தீக்ஷித், இந்தத் தோல்விக்கான காரணத்தை தனது பணி கொழும்பில் விரிவாகக் குறிப்பிட்டிருப்பதைச் சுட்டிக்காட்டுகிறார் மணி சங்கர் அய்யர்.

அதாவது தமிழ் ஈழம் மீதான பிரபாகரனின் பிடிப்பையும் திட்டமிடுவதில் அவருக்கு இருந்த புத்திசாலித்தனம், எதிர்த்து நிற்பதில் உறுதியான தன்மை, ஒற்றை நோக்குடைய தன்மை ஆகியவற்றை மிகக் குறைவாக மதிப்பிட்டு விட்டோம், என்கிறார்.

அதேபோல, இந்திய அமைதி காக்கும் படைக்குச் சரியான தகவல்கள் அளிக்கப் படவில்லை. தமிழர்களுக்காக இறங்கி வருவதில் ஜெயவர்தனேவுக்கு இருந்த அரசியல் உறுதியையும் நேர்மைத் தன்மையையும் அதிகமாக மதிப்பிட்டு விட்டோம். இலங்கைத் தமிழர்களிடமிருந்து புலிகளைத் தனியாக பிரித்து விட முடியும் என்ற எனது நம்பிக்கையும் பொய்த்துப் போனது.

இலங்கை விவகாரத்தில் ராஜீவ் காந்தியின் ஈடுபாட்டை வரலாறு துல்லியமாக முடிவுசெய்யும். இந்திய, இலங்கை மக்களின் நலனுக்காக எவ்வித பிரதிபலனையும் தராத பணியை அவர் மேற்கொண்டார். அதற்கு அவர் தன் உயிரை விலையாகக் கொடுத்தார்,' என்று இந்த நூலில் சொல்கிறாற் மணி சங்கர் அய்யர்.

நன்றி:- பிபிசி 21 மே 2024

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation

10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826



**Christeen Seevaratnam**
416-258-6759

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com













# அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா போன்ற நாடுகளே சர்வதேச ஒழுங்குமுறை வீழ்ச்சிக்குக் காரணம்

அமெரிக்கா பிரிட்டன் ரஸ்யா சீனா போன்ற நாடுகளே விதிமுறைகளை அடிப்படையாக கொண்ட சர்வதேச ஒழுங்குமுறை வீழ்ச்சியடைவதற்கான காரணமாக உள்ளன என தெரிவித்துள்ள சர்வதேச மன்னிப்புச்சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட் தென்னாபிரிக்கா சர்வதேச நீதிமன்றம் சென்றமையும் சர்வதேச அளவில் இடம்பெறும் காசா தொடர்பான ஆர்ப்பாட்டங்களும் சர்வதேச சட்டங்கள் பாதுகாக்கப்படவேண்டும் என கருதும் மக்கள் உள்ளனர் என்பதை வெளிப்படுத்துகின்றது என தெரிவித்துள்ளார்



கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் விதிமுறைகளை அடிப்படையாக கொண்ட சர்வதேச ஒழுங்குமுறையின் வீழ்ச்சி ஐநா போன்ற அமைப்புகளின் மீதுமக்கள் நம்பிக்கை இழப்பு குறித்த கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

1948ம் ஆண்டு புதிய ஒழுங்குமுறையை உருவாக்குவதில் பங்களிப்பு செய்தவர்களே அதனை அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். அமெரிக்கா பிரிட்டன் ரஸ்யா சீனா போன்ற நாடுகளே விதிமுறைகளை அடிப்படையாக கொண்ட சர்வதேச ஒழுங்குமுறை வீழ்ச்சியடைவதற்கான காரணமாக உள்ளன.

காசாவில் இடம் பெறும் விடயங்களை அவதானிக்கும் போது இது புலப்படுகின்றது. ஆனாலும் இதற்கு எதிராக தென்னாபிரிக்கா சர்வதேச நீதிமன்றத்திற்கு சென்றுள்ளமை முக்கியமாக கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயம் இது சர்வதேச அமைப்புகள் மீது மக்கள் நம்பிக்கை இழக்கவில்லை என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

1948ம் ஆண்டின் இனப்படுகொலைகள் தொடர்பான பிரகடனம் மிகவும் அவசியமான விடயம் என்பதை தென்னாபிரிக்காவின் நடவடிக்கைகள் உலகிற்பு தெளிவுபடுத்தியுள்ளன.

உலக நாடுகளில் இதற்கு பெரும் வரவேற்பு காணப்படுகின்றது குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளில் இதற்கு பெரும் ஆதரவு காணப்படுகின்றது. காசாவில் யுத்தநிறுத்தத்தை கோரும் தீர்மானத்தை கொண்டு வருவதில் வழமையாக இந்த விடயத்தில் ஆர்வம் காண்பிக்கும் நாடுகளிற்கு பதில் வேறு நாடுகள் ஆர்வம் காட்டியமை குறிப்பிடத்தக்க விடயம். அமெரிக்கா உட்பட பல நாடுகளில் பல்கலைகழகங்களில் காசா விவகாரம் தொடர்பில் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெறுகின்றன. பெருமளவு மக்களும் பல்கலைகழக மாணவர்களும் வீதியில் இறங்கியுள்ளனர் சர்வதேச சட்டங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என கருதும் பெருமளவு மக்கள் உள்ளனர் என்பதை இது வெளிப்படுத்துகின்றது.

